Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 523 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 04ஆம் திகதி புதன்கிழமை
(18.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 16 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## சம்பந்தனின் ஆசனத்திற்கு அருகே சென்ற வாக்குப்பெட்டி

நேற்று சபை வாக்கெடுப்பில்

02 பக்கம்

## அரச பணியாளர்கள் சேவைக்கு வருவதை வரையறுக்க பணிப்பு

பொதுநிர்வாக அமைச்சு கோரிக்கை

02 பக்கம்

# உயர் அதிகாரிகளால் மூண்ட வன்முறை!

### பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளரின் செயற்பாடு குறித்து விமல் வீரவங்ச சபையில் சாட்டை



•யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த 9ஆம் திகதி வன்முறைச் சம்பவம் இடம்பெற்றபோது, அலரிமாளிகைக்கு வருகைதந்தவர்கள் காலிமுகத்திடலுக்குச் செல்வதை தடுக்க வேண்டாம் என பொலிஸ் மா அதிபரும் பாதுகாப்புச் செயலாளரும் பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு உத்தரவிட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவர் சாட்சியம் அளித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச சபையில் வெளிப்படுத்தினார்.

அத்தோடு, துண்டு அணிந்த காகமே அலரிமாளிகைக்கு ஆட்களை அழைத்துவர திட்டமிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) காலை ஆரம்பமான சபை அமர்வில் கலந்துகொண்டு, சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகையில் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தவர்களில் ஒரு பகுதியினர் காலிமுகத்திடலுக்குச் சென்றால் அங்கு நடக்கும் ஆபத்து என்ன என்பது மூளையுள்ள அனைவருக்கும் புரிந்திருக்கும். ஆனால், முன்னாள் பிரதமர் தன்னுடைய பதவியிலிருந்து செய்வதற்குத் தயாராக இருந்திருந்தால், வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் அலரிமாளிகைக்குள் ஆவேசமாக பேசுவதற்கு ஒவ்வொருவருக்கும் வாய்ப்பளித்தது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. நாங்கள் இன்று பொருளாதார ஆபத்துக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

07 பக்கம்

## ஜனாதிபதி மீதான நம்பிக்கை நாடாளுமன்றில் உறுதியானது

### சுமந்திரன் முன்வைத்த யோசனை 51 மேலதிக வாக்குகளால் தோற்கடிப்பு



| | | | | | |
|---|---|---|---|---|---|
| G 002. G.L. Peiris | No | G 030. C. B. Rathnayake | No | G 058. A. Aravindh Kumar | No |
| G 003. Chamal Rajapaksa | No | G 031. Keheliya Rambukwella | No | G 059. Kapila A[illegible] | No |
| G 005. Prasanna Ranatunga | No | G 033. Basil Rohana Rajapaksa | No | G 060. Geetha Samanmali Kumarasinghe | No |
| G 006. Dinesh Gunawardena | No | G 034. S. M. Chandrasena | No | G 061. Gayashan Na[illegible] | No |
| G 007. Ranil Wickremesinghe | No | G 035. Mahindananda Aluthgamage | No | G 062. B. Y. G. Rathnasekara | No |
| G 009. M.U.M. Ali Sabry | No | G 036. Rohitha Abeygunawardhana | No | G 063. Suren Raghavan | No |
| G 010. Ramesh Pathirana | No | G 038. Sarath Weerasekera | No | G 064. Diana Gamage | No |
| G 011. Dilum Amunugama | No | G 039. Rohana Dissanayaka | No | G 065. Sivanesathurai Santhirakanthan | No |
| G 012. Wimalaweera Dissanayaka | No | G 040. Arundika Fernando | No | G 066. S. M. M. Muszhaaraff | No |
| G 013. Mohan Priyadarshana De Silva | No | G 041. Vijitha Berugoda | No | G 067. Dilan Perera | No |
| G 014. Janaka Wakkumbura | No | G 042. Lohan Ratwaththe | No | G 068. Premalal Jayasekara | No |
| G 015. Vidura Wickramanayaka | No | G 043. Sanath Nishantha | No | G 069. Roshan Ranasinghe | No |
| G 016. Shehan Semasinghe | No | G 044. Tharaka Balasuriya | No | G 070. Shasheendra Rajapaksa | No |
| G 017. Kanaka Herath | No | G 045. Indika Anuruddha Herath | No | G 071. Jayantha Ketagoda | No |
| G 018. Kanchana Wijesekera | No | G 046. Siripala Gamalath | No | G 072. Sampath Athukorala | No |
| G 019. Naseer Ahamed | No | G 047. Anuradha Jayaratne | No | G 073. Thisakutti Arachchi | No |
| G 020. Thenuka Vidanagamage | No | G 048. S. Viyalanderan | No | G 074. U. K. Sumith Udukumbura | No |
| G 021. Nalaka Godahewa | No | G 049. D. V. Chanaka | No | G 076. Sanjeeva Edirimanna | No |
| G 022. Channa Jayasumana | No | G 050. Sisira Jayakody | No | G 077. Akila Ellawala | No |
| G 023. Premitha Bandara Tennakoon | No | G 051. Piyal Nishantha De Silva | No | G 078. Lalith Ellawala | No |
| G 024. Johnston Fernando | No | G 052. Prasanna Ranaweera | No | G 079. Udayana Kirindigoda | No |
| G 025. S. B. Dissanayake | No | G 053. D. B. Herath | No | G 080. Jagath Kumara Sumithraarachchi | No |
| G 026. Pavithradevi Wanniarachchi | No | G 054. Seetha Arambepola | No | G 081. K. P. S. Kumarasiri | No |
| G 027. Gamini Lokuge | No | G 055. Shantha Bandara | No | G 082. Karunadasa Kodithuwakku | No |
| G 028. Bandula Gunawardana | No | G 056. K. Kader Masthan | No | G 083. Nalaka Bandara Kottegoda | No |
| G 029. Janaka Bandara Thennakoon | No | G 057. Ashoka Priyantha | No | G 084. Upul Galappaththi | No |

•யோ.தர்மராஜ்

நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளை சட்டங்களை இடைநிறுத்தி ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்த யோசனை 51 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) காலை ஆரம்பமான சபை அமர்வில் பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் பின்னர், ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்ததுடன், நிலையியற் கட்டளை சட்டத்தை...

02 பக்கம்

## பொன்சேகாவை கோட்டாபயவென அழைத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா

### சபையில் சிரிப்பொலி

•யோ.தர்மராஜ்

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்த யோசனை தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், வாக்களிக்க முடியாது இயந்திரம் செயலிழந்தவர்களின் பெயர்களை அழைத்தபோது, சபாநாயகரால் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை, கோட்டாபய ராஜபக்ஷ என அழைக்கப்பட்ட விடயம் சபையில் நகைப்புக்குரியதாக மாறியது.

02 பக்கம்

## சனத் நிஷாந்த, மிலான் எம்.பிமார் நேற்று கைது!





07 பக்கம்

## சர்ச்சைகளுக்கு மத்தியில் தெரிவான பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ

### ஆதரவாக 109 வாக்குகள், ரோஹிணிக்கு 78 வாக்குகள், 23 வாக்குகள் நிராகரிப்பு

02 பக்கம்

## ரணில் சுமக்கும் மேலதிக சுமை: 'த இந்து' ஆசிரியர் தலைப்பு சுட்டிக்காட்டு

THE HINDU

ராஜபக்ஷக்களின் அரசியல் வாய்ப்புகளை மீள்விப்பதற்கு அல்ல, நாட்டின் அரசியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார மீட்சிக்காகவேதான் பாடுபடுவதாக விக்ரமசிங்க தன்னை விமர்சிப்பவர்களுக்கு நிரூபித்துக்காட்ட வேண்டிய மேலதிக சுமையொன்றையும் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு இந்தியாவிலிருந்து வெளியாகும் 'த இந்து' பத்திரிகை தனது நேற்றைய பதிப்பின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## பயங்கரவாதிகளாலேயே அமரகீர்த்தி எம்.பி. கொலை



### பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ கண்டனம்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அமரகீர்த்தி அத்துகோரள பயங்கரவாதிகளினாலேயே கொலைசெய்யப்பட்டுள்ளதாக புதிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

02 பக்கம்

## மக்கள் விடுதலை முன்னணியினரே எனது வீட்டுக்கு தீயை வைத்தனர்

### வீரசிங்க எம்.பி. சபையில் சாடல்

•யோ.தர்மராஜ்

வயலில் விவசாயம் செய்து கட்டிய வீட்டுக்கு மக்கள் விடுதலை முன்னணியினரே தீ வைத்தனர். என்னுடைய வீட்டிற்கு தீ வைப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை அறிந்தும் பொலிஸார் அமைதியாக இருந்ததோடு, தாக்குதல்காரர்களுக்கு அவர்களே இடமளித்துள்ளதாகவும் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. வீரசிங்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) காலை ஆரம்பமான சபை அமர்வில் கலந்துகொண்டு, சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## நாடாளுமன்றத்தின் தற்போதைய கலாசாரத்தை மாற்ற வேண்டும்!

### இல்லையேல் வருவதற்கு சபையும் இருக்காதென்கிறார் பிரதமர் ரணில்



•யோ.தர்மராஜ்

அனைவரின் விமர்சனங்களுக்கும் மத்தியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கே நானும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். இதனை தனியாக முன்னெடுக்க முடியாது - என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, கொள்கைகள், நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளாது நாடாளுமன்றத்தில் ஒருவர் பேசும்போது மற்றவர்கள் கூச்சலிடும் கலாசாரத்தை மாற்றுங்கள்.

02 பக்கம்

## உஷ்



நாடாளுமன்றத்தில் நேற்று ரணிலும் மைத்ரியும் மூடிய அறைக்குள் பேச்சு நடத்தினராம். இந்த நேரடிப் பேச்சுக்கான ஏற்பாட்டை செய்தவர் பதுளை எம்.பி. சாமர சம்பத் தசநாயக்க. மைத்ரியின் கையைப்பிடித்து ரணிலின் நாடாளுமன்ற அறைக்குள் அனுப்பிவைத்தாராம் சாமர.

ரணிலும், மைத்ரியும் பழைய பகையை மறந்து மனம்விட்டு பேசியதாக தகவல்.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில், யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மாணவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அஞ்சலி செலுத்தினர். (படம்: யாழ். நிருபர்)

## பிரச்சினைக்குத் தீர்வை தரும் தலைவர்களுக்கு ஆதரவு

### ஹரீன், மனுஷ ரணிலுக்கு கடிதம்

•யோ.தர்மராஜ்

நாடு நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள போது, நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்வரும் எந்தவொரு தலைவருக்கும் பூரண ஆதரவை வழங்கத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

அதன்படி சில நிபந்தனைகளுக்கு அடிப்பணிந்தே பிரதமருக்கு ஆதரவு வழங்குவதாக அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

07 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



ராஜபக்ஷமாரை விரட்ட முடியாது என்கிற செய்தியை சொல்லுறதுக்காக அஜித் ராஜபக்ஷவ பிரதி சபாநாயகராக கொண்டுவந்திருக்குது போல பொதுஜன பெரமுன...

## சர்ச்சைகளுக்கு மத்தியில்...

**யோ.தர்மராஜ்**

பிரதி சபாநாயகராக செயற்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மீண்டும் பதவி விலகியதையடுத்து, நாடாளுமன்றத்தில் நேற்று (17) இடம்பெற்ற புதிய பிரதி சபாநாயகருக்கான இரகசிய வாக்கெடுப்பு தெரிவில், ஆளுந்தரப்பு உறுப்பினர் அஜித் ராஜபக்ஷ பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு ஆதரவாக 109 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி விஜேரத்னவுக்கு ஆதரவாக 78 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. 23 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

முன்னாள் பிரதி சபாநாயகர் தன்னுடைய பதவியை இரு முறைக்கு மேலாக இராஜினாமா செய்திருந்தார். இந்த நிலையில், கடந்த 5ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, மீண்டும் பிரதி சபாநாயகராக சியம்பலாப்பிட்டிய தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து, கடந்த வாரத்தில் மீண்டும் அவர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தார். இதனால், நாட்டின் நெருக்கடிக்கு மத்தியில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) சபை அமர்வுகள் கூடியபோது, வெற்றிடத்துக்கான பிரதி சபாநாயகரை தெரிவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனையடுத்து, முற்பகல் 10.30 மணியளவில் பிரதி சபாநாயகர் பதவிக்கான தேர்வு முன்னெடுக்கப்படும் என சபாநாயகர் அறிவித்தார்.

இதனையடுத்து, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில், ரோஹிணி விஜேரத்னவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்மொழிந்தார். இதனை எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வழிமொழிந்தார்.

இதனையடுத்து, பிரதி சபாநாயகர் பதவிக்காக ஆளுந்தரப்பின் சார்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவின் பெயர் மீண்டும் முன்மொழியப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளரும் அமைச்சருமான ஜீ.எல். பீரிஸினால் அஜித் ராஜபக்ஷவின் பெயர் முன்மொழியப்பட்டது. அதனை ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பண்டார வழிமொழிந்தார்.

இதனையடுத்து, பிரதி சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால், வாக்கெடுப்பை நடத்துவதற்காக இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதாக சபாநாயகர் அறிவித்தார்.

எனினும், அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் கட்சிகளின் சார்பில் கருத்து தெரிவித்த விமல் வீரவங்ச, வாக்கெடுப்புக்காக 9 மில்லியன் ரூபா செலவாகின்றது. எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் யோசனையையும் ஆளுந்தரப்பு யோசனையையும் எடுத்து மீண்டும் வாக்கெடுப்பு நடத்தாது, எதிர்க்கட்சித் தலைவரும் பிரதமரும் பேச்சுவார்த்தை நடத்தி ஒருவரின் பெயரை முன்மொழிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறினார். மீண்டும் வாக்கெடுப்பு நடத்தி நாடாளுமன்றத்தை மக்கள் மத்தியில் நகைச்சுவையாக்க வேண்டாம் எனக் கூறினார்.

இதனையடுத்து, பேசிய, நிமல் லான்சா, கடந்த முறை வாக்கெடுப்பு நடத்தியதால் 22 மில்லியன் மக்களும் எங்களை தூற்றினர். எனவே, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் கலந்துரையாடி, கட்சித் தலைவர் கூட்டத்தை கூட்டி ஒருவரின் பெயரை முன்வைக்க வேண்டும். இல்லையேல், வாக்கெடுப்பை நிராகரித்து விட்டு நாங்கள் வெளிநடப்புச் செய்வோம் எனக்கூறினார்.

எனினும், பிரதமரின் கோரிக்கைக்கு அமையவே, நாங்கள் பெண் ஒருவரை பிரதி சபாநாயகருக்கு முன்மொழிந்துள்ளோம். வாக்கெடுப்பு நடத்தாது பெண் ஒருவருக்கு இந்த வாய்ப்பை கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டினர்.

எனினும், தொடர்ந்து ஆளுந்தரப்பும் எதிர்த்தரப்பும் விட்டுக்கொடுக்காது பேசிக்கொண்டிருந்த நிலையில், பிரதி சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ள இருவரும் பேச்சுவார்த்தை நடத்தி, ஒருவர் வாக்கெடுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியும் என சபாநாயகர் அறிவித்தார். எனினும், இருவரும் முன்வராததால் வாக்கெடுப்பு நடத்தப்படும் என சபாநாயகர் மீண்டும் அறிவித்தார்.

இதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச எழுந்து, இந்த வாக்கெடுப்பு அநாவசியமானது, எங்களுடைய கோரிக்கையை மீறி வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் என் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி உள்ளிட்ட 10 கட்சிகள், வாக்குச்சீட்டில் குறுக்காக கீறுவோம் என்றார். இதனையடுத்து, பேசிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன, தாங்களும் வாக்கெடுப்பை நிராகரிப்பதாகவும் கூறினார்.

எனினும், இரு தரப்பும் விட்டுக்கொடுக்காதமையினால் புதிய பிரதி சபாநாயகருக்கான தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டில் தான் தெரிவு செய்யும் வேட்பாளரின் பெயரை சரியாக எழுதி, தமது கையொப்பத்தையும் இடவேண்டும். பெயர் சரியாக எழுதப்படாவிட்டாலோ அல்லது கையொப்பம் இடப்படாவிட்டாலோ வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும் என சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

இதனையடுத்து, நாடாளுமன்றத்தின் மத்தியில் வாக்களிப்பதற்கான இடத்தில் வாக்களிக்க ஆரம்பித்தனர். அதன்படி, பிரதமர் ரணில் விக்ரமசிங்க வாக்களிப்பை ஆரம்பித்து வைத்தார். இதனையடுத்து, ஆளுந்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் பெயர்கள் அழைக்கப்பட ஒவ்வொருவராக வந்து வாக்களித்தனர். எனினும், பல உறுப்பினர்கள் சபைக்கு வருகை தந்திருக்கவில்லை.

இதனையடுத்து, இரகசிய வாக்கெடுப்பு நண்பகல் 11.20 மணியளவில் நிறைவுபெற்றது. சபாநாயகர் முன்னிலையில், நாடாளுமன்ற செயலாளர், பிரதி செயலாளர்களின் பங்களிப்புடன் வாக்குகள் எண்ணப்பட்டன. பின்னர் 11.45மணியளவில் முடிவு சபாநாயகரினால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி ஆளுந்தரப்பு சார்பாக களமிறக்கப்பட்ட அஜித் ராஜபக்ஷ 109 வாக்குகளையும், எதிர்க்கட்சி சார்பில் களமிறங்கிய ரோஹிணி விஜேரத்ன 78 வாக்குகளையும் பெற்றனர். அந்தவகையில் புதிய பிரதி சபாநாயகராக அஜித் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார்.

## அரச பணியாளர்கள்...

நாட்டில் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக அரசாங்க செலவினங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அரச ஊழியர்களை அலுவலகங்களுக்கு அழைப்பதனை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ்.ருவன் சந்திர இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அலுவலகப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் வரவழைத்து நிறுவனத் தலைவர்களின் விருப்பத்திற்கேற்ப செயற்பட அனுமதிக்குமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொலைதூரத்தில் இருந்து பணிக்கு வரும் உத்தியோகத்தர்களை அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள பணியிடத்திற்கு தற்காலிகமாக இணைத்துக்கொள்ள தேவையான அதிகாரங்களை வழங்குமாறும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மின்சாரம், எரிபொருள், தண்ணீர் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொன்சேகாவை...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) இடம்பெற்ற சபை அமர்வின்போது, நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளை சட்டங்களை இடைநிறுத்தி ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமா இல்லையா என்பது தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பின்போது, இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. எனினும், சில உறுப்பினர்களின் இயந்திரம் செயலிழந்ததால், அவர்களின் பெயர்கள் அழைக்கப்பட்டு, வாக்கெடுப்பு பதிவு செய்யப்பட்டது. இதன்போது, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் பெயரை அழைக்கும்போது, சபாநாயகர் கோட்டாபய ராஜபக்ஷ என அழைத்தார். இதன்போது, சபையிலுள்ள அனைவரும் சிரித்ததுடன், ஆசனத்திலிருந்து எழுந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, 'இறைவனே பார்த்துக்கொள்ள வேண்டும்' எனக் கூறினார். இதனையடுத்து, சிரித்துக்கொண்டே பதிலளித்த சபாநாயகர், "உங்களுடைய பெயருக்கு பதிலாக தவறாகக் கூறிவிட்டேன் மன்னியுங்கள்" எனக் கூறினார். எனினும், சபையிலுள்ள அனைவரும் சபாநாயகரின் பதிலையடுத்து சிரித்துக்கொண்டிருந்தனர்.

## ஜனாதிபதி மீதான...

இடைநிறுத்தி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் யோசனை முன்வைத்தார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பு ஒரு நாளிலேயே மேற்கொள்ள முடியாது என்பதால், நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி இந்த வாக்கெடுப்பு இன்றைய தினமே (நேற்று) மேற்கொள்ள வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தியின் லக்ஷ்மன் கிரியெல்ல வழிமொழிந்தார்.

எனினும், நிலையியற்கட்டளைகளை இடைநிறுத்த முடியாது. அதற்கு நாங்கள் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்க முடியாது என தெரிவித்த சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, அப்படி நிலையியற் கட்டளை சட்டத்தை நிறுத்த வேண்டுமாயின் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென கோரினார்.

இதனையடுத்து, ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிலையியற் கட்டளை சட்டங்களை இடைநிறுத்தி விவாதத்திற்கு எடுப்பதா, இல்லையா? என சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்த நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தும் பிரேரணைக்கு எதிராக 119 வாக்குகளும் ஆதரவாக 68 வாக்குகளும் அளிக்கப்பட்டதால், குறித்த யோசனை 51 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

## சம்பந்தனின் ஆசனத்திற்கு...

**யோ.தர்மராஜ்**

நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் அமர்ந்திருந்த இடத்திற்கே வாக்குப் பெட்டியை கொண்டுச்சென்று வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) இடம்பெற்ற சபை அமர்வின்போது, புதிய பிரதி சபாநாயகருக்கான இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதற்காக, சபைக்கு மத்தியிலேயே வாக்குச் சாவடியும் பெட்டியும் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு உறுப்பினர்களின் பெயர்கள் அழைக்கப்பட அவர்கள் எழுந்து வந்து வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

இவ்வாறு பெயர் அழைக்கும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனின் பெயரும் அழைக்கப்பட்டது.

இதன்போது, அவரால் எழுந்து வர முடியாததை அறிந்த நாடாளுமன்றச் செயலாளர், சம்பந்தனின் வாக்கை அவர் இருக்கு இடத்திற்குச் சென்று பெற்றுக்கொள்வதா என சபாநாயகரிடம் கோரினார்.

இதற்கு சபாநாயகர் அனுமதியளித்ததையடுத்து, வாக்குப் பெட்டியை அவர் அமர்ந்திருந்த இடத்துக்கே கொண்டுச் சென்று அவருடைய வாக்கை பெற்றுக்கொண்டனர்.

இவருடைய பெயர் இடைநடுவே அழைக்கப்பட்டாலும் அவரால் எழுந்து வர முடியாததினால், அனைத்து உறுப்பினர்களும் வாக்களித்த பின்னரே, அவருடைய வாக்கு பெற்றுக்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதிகளாலேயே...

அத்தோடு, பெறுமதியான நேரத்தை புதிய பிரதி சபாநாயகர் தெரிவுக்காக செலவு செய்ய நேரிட்டதையிட்டு, பொது மக்களிடம் நான் மன்னிப்பு கோருகின்றேன். இதுவே நாடாளுமன்றத்தின் சம்பிரதாயம் எனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) காலை ஆரம்பமான சபை அமர்வில் இடம்பெற்ற பிரதி சபாநாயகர் தெரிவில் வெற்றிப்பெற்று பின்னர் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரதி சபாநாயகர் தெரிவின்போது, வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இனி இங்குள்ள அனைவருக்கும் நான் பிரதி சபாநாயகர். அனைவருக்கும் சமமான முறையிலேயே நான் செயற்பட வேண்டும்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு இதற்கு முன்னரும் என்னுடைய பெயர் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும், நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளுக்குமிடையில் ஒற்றுமையை பேண வேண்டும் என்பதால், கடந்த முறை போட்டியிலிருந்து விலகினேன். எனினும், சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்து என்னால் முடிந்த செயற்பாடுகளை புரிந்துணர்வுடன் நீதியாகவும் செயற்பட்டுள்ளேன். இதன்போது, யாருக்கேனும் நான் அதிகமாகவும் குறைவாகவும் உதவி செய்ய வேண்டும் என நினைத்து செயற்பட்டதில்லை. என்னுடைய வரையறைக்குள் என்னால் முடிந்தவரை அனைவருக்காகவும் முடிந்ததை செய்துள்ளேன். இதனாலேயே புதிய பிரதி சபாநாயகர் பதவிக்கு என்னுடைய பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

எனினும், முழு சமூகமும் புதிய பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்புக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டாலும் நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கு அமைய, வேறு வழியில்லை. எனவே, பெறுமதியான நேரத்தை புதிய பிரதி சபாநாயகர் தெரிவுக்காக செலவு செய்ய நேரிட்டதையடுத்து பொது மக்களிடம் நான் மன்னிப்பு கோருகின்றேன். நாடாளுமன்றத்திலுள்ள எந்தவொரு உறுப்பினரும் என்னுடன் தனிப்பட்ட முறையில் முரண்பாடில்லை. அனைவரும் சகோதரத்துடனே செயற்பட்டோம். அரசியல் எதிரிகள் இல்லாத வகையிலேயே நான் என்னுடைய அரசியல் வாழ்க்கையை முன்னெடுத்துள்ளேன்.

எனினும், முழு நாட்டு மக்களும் நாடாளுமன்றத்திலுள்ள 225 பேரையும் கொலை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலுள்ள சந்தர்ப்பம் இது. மக்களுக்கான அர்ப்பணிப்பை செய்தாலும் சில குழுக்களால் இன்று மக்களை திசைத்திருப்ப முடிந்துள்ளது. பிரதி சபாநாயகர் தெரிவை ஆசையுடன் எதிர்பார்த்திருந்த அமரகீர்த்தி அத்துகோரள உயிரிழந்துள்ளது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த வாரத்தில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான சம்பவங்களில் பயங்கரவாதிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன். அது அரசியலல்ல. மாறாக, அது பயங்கரவாத செயற்பாடாகும்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் நிலையியற் கட்டளைச் சட்டத்துக்கு அமைய செயற்பட்டால் எங்களிடையே எவ்வித முரண்பாடுகளும் ஏற்படாது. இன்று பெரும்பாலான உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வருகை தரவே முடியவில்லை. பலர் தலைமறைவாகி வாழ வேண்டியுள்ளது.

மக்களுக்கான பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய பொறுப்பு 225 பேருக்கும் இருப்பதால், நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும். பிரிவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையில்லை. பெரும்பான்மை யாருக்கு இருக்கு என்று தெரிந்து, வாக்கெடுப்புக்கு சென்று காலத்தை வீணடித்துவிட்டோம். 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் 225 பேரும் நல்ல பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும். இனியும் பிரிந்து செயற்படுவதை விடுத்து, ஒற்றுமையாக செயற்பட வேண்டும் - என்றார்.

## ரணில் சுமக்கும் மேலதிக...

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது ,

ஒவ்வொரு நெருக்கடியும் வாய்ப்பு ஒன்றுக்கான விதைகளைக் கொண்டிருக்கிறது என்ற பழமொழி இலங்கையின் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை விடவும் வேறு எவரைப் பொறுத்தவரையிலும் கூடுதலான அளவுக்கு உண்மையானதாக இருக்கமுடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரரான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிரான காலவரையறையற்ற ஆர்ப்பாட்டங்களை மூளவைத்த கடுமையான பொருளாதார நெருக்கடி விக்ரமசிங்கவை கடந்தவாரம் வரை அவருக்கு எந்த வாய்ப்புமே இல்லாத ஒரு பதவிக்கு உந்தித்தள்ளியிருக்கிறது.

தற்போதைய கொந்தளிப்பான நிலைவரத்துக்கு மத்தியில் அரசியல் உறுதிப்பாட்டையும் பொருளாதார மீட்சியையும் நோக்கி பணியாற்றக்கூடிய அரசாங்கம் ஒன்று இலங்கைக்கு தேவைப்பட்டது. இடையறாத ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியதையடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி கோட்டாபயவின் கீழ் பணியாற்ற முன்வராத நிலையில், விக்ரமசிங்கவுக்கு அரிதான ஒரு வாய்ப்புக்கு வழி பிறந்தது. 2020 ஓகஸ்ட் நாடாளுமன்றத் தேர்தலுடன் விக்ரமசிங்கவுக்கான அரசியல் வாய்ப்புகள் பெரும்பாலும் முடிவுக்கு வந்தன என்றுதான் கூறவேண்டும். அந்த தேர்தலில் அவரது ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தைக் கூட வென்றெடுக்கவில்லை. விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையில் நாடளாவிய ரீதியில் கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற ஓரேயொரு தேசியப்பட்டியல் ஆசனம் மூலமாகவே அவரால் நாடாளுமன்றத்துக்கு வரக்கூடியதாக இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெருமளவு ஆதரவுத்தளம் முன்னாள் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாசவுடன் சென்றுவிட்டது. அவர் இப்போது ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியின் தலைவராக இருக்கிறார். மக்களின் சீற்றத்தின் இலக்காக விளங்கும் ராஜபக்ஷக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களிலேயே விக்ரமசிங்க தங்கியிருக்கவேண்டியிருப்பதால், அவர் இப்போது ஒரு அசாதாரண சூழ்நிலையில் இருக்கிறார். பொருளாதார மீட்சியை நோக்கிய நடவடிக்கைகளுக்கு நிபந்தனையுடனான ஆதரவை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி முன்வந்திருக்கிறது.

அவர் பிரதமராக பதவியேற்றதில் உள்ள அரசியல் தார்மீகம் குறித்து பல கேள்விகள் இருக்கின்றன; பதவி விலகவேண்டும் என்று ஜனாதிபதிக்கு கொடுக்கப்படும் நெருக்குதல்களை தணித்தமைக்காக விக்ரமசிங்க மீது மக்கள் கொண்டிருக்கும் ஆத்திரத்தில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் பொருளாதார நெருக்கடியை கையாளுவதற்கு நடைமுறைச் சாத்தியமான ஏற்பாடொன்றின் தேவை மிகவும் அவசரமானதும் அவசியமானதுமாகும். தட்டுப்பாடுகள் நிறைந்த நாட்டுக்கு நிதியுதவிகள் கிடைப்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேச கூட்டமைப்பு (International Consortium) ஒன்றை அமைப்பது குறித்து அவர் பேசியிருக்கிறார்.

விக்ரமசிங்கவின் ஒரே பலம் சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணமேயாகும். 2001 - 2002 காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டு அவர் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோது சர்வதேச சமூகம் உறுதியாக ஆதரவு வழங்கியது. அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்கின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்படக்கூடிய அளவுக்கு அரசியல் சீர்திருத்தங்களை துரிதப்படுத்துவது குறித்து பேசப்படுகிறது.

ஆனால், அத்தகைய பரந்தளவிலான மாற்றங்கள் பற்றிய ஊகங்கள் நம்பிக்கையை தருவதாக இல்லை. ஏனென்றால், கடந்த காலத்தில் அத்தகைய பல வாய்ப்புகள் தவறவிடப்பட்டன.

ராஜபக்ஷக்களின் அரசியல் வாய்ப்புகளை மீள்விப்பதற்கு அல்ல, நாட்டின் அரசியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார மீட்சிக்காகவே தான் பாடுபடுவதாக விக்ரமசிங்க தன்னை விமர்சிப்பவர்களுக்கு நிரூபித்துக்காட்டவேண்டிய மேலதிக சுமையொன்றையும் கொண்டிருக்கிறார் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத்தின்...

இனியும், இவ்வாறே சென்றால் அடுத்த முறை நாங்கள் சபைக்கு வர நாடாளுமன்றம் இருக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) காலை ஆரம்பமான சபை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தனக்கு சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனை கிடைத்துள்ளதால் அதற்கு ஏற்றவாறு செயற்படுவதாக பொலிஸ்மா அதிபர் என்னிடம் தெரிவித்தார். எனினும், அது தொடர்பாக சபாநாயகருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நான் அவரிடம் தெரிவித்தேன். குறிப்பாக, இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை இது தொடர்பாக சபாநாயகருக்கு அறிக்கையிடுவதே நல்லது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். காலிமுகத்திடலில் இடம்பெற்ற சம்பவத்தை நான் கண்டித்துள்ளேன்.

இதன்போது, எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டபோது, இன்று இந்த சபையில் கூச்சலிடுவோரில் எத்தனை பேர் என்னிடம் அமைச்சுப் பதவிகளை கோரினர் எனக் கூறி தொடர்ந்து உரையாற்றினார்.

இதற்கு முன்னர் பிரதி சபாநாயகர் தெரிவின் போது, நான் சியம்பலாபிட்டிக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்திருந்தேன். அங்கு இடம்பெற்ற குழப்பம் என்பது பின்னர் தெரியவந்தது. எனவே, தற்போதைய தெரிவின் போதும் நான் தொடர்புபட்டிருக்கவில்லை. என்னை அழைத்திருந்தால் ஒருவரை நியமிக்குமாறு நானும் கூறியிருப்பேன்.

பெண் ஒருவர் பிரதி சபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதை நானும் விரும்புகின்றேன். செனட் சபையின் பிரதி சபாநாயகராக எட்மின் மொரகொட செயற்பட்டதையடுத்து, இதுவரை அப்பதவிக்கு எந்தவொரு பெண்ணும் தெரிவு செய்யப்படவில்லை. இன்றும் அது நிறைவேற்றப்படவில்லை. இதற்கு என்னை யாரும் குற்றம் சுமத்த வேண்டாம்.

தனிக் கட்சியாக இருந்து பிரதமராக தெரிவு செய்யப்பட்டதால் எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்கும் சமுகமளிக்க முடியவில்லை. ஆளுந்தரப்பு கூட்டங்களுக்கும் நான் செல்லவில்லை. நான் எந்தப் பக்கம் இருக்கின்றேன் என்பது கூட எனக்கு தெரியவில்லை.

இன்று முழு நாடாளுமன்றமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. ஒரு உறுப்பினர் உயிரிழந்துள்ளார். அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக எங்களுடன் செயற்பட்ட குமார வெல்கமவும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அது சாதாரணமாக இடம்பெற்ற சம்பவமல்ல என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

பலரின் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. யாருடைய வீடு எரிக்கப்பட்டாலும் அவற்றை நாங்கள் தேடிப்பார்க்க வேண்டும். இங்குள்ள எதிர்க்கட்சியாக இருக்கட்டும் ஆளுங்கட்சியாக இருக்கட்டும், எரிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நஷ்டஈட்டை வழங்க வேண்டும்.

நான் இன்று ஆளுங்கட்சிக்கு வந்தால் காட்டிக்கொடுத்துள்ளதாகக் கூற முடியும். ஆனால், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். நாடாளுமன்ற கலாசாரத்தை மாற்ற வேண்டும். நாடாளுமன்ற சபை அல்லது தேசிய அரசியல் சபையை உருவாக்க வேண்டும். இணக்கம் தெரிவிப்பதற்கு இணக்கம் தெரிவிப்போம். முடியாதவற்றை பேச்சுவார்த்தை நடத்தி வாக்கெடுப்பு நடத்த வேண்டுமாயின் நடத்துவோம். இல்லையேல், பேசித் தீர்த்துக்கொள்வோம்.

இரு பக்கம் கூச்சலிட்டுக்கொண்டிருக்கும் நாடாளுமன்ற கலாசாரத்துடன் முன்னோக்கிச் செல்ல முடியாது. நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அடுத்த வாரத்தில் பொருளாதாரம் தொடர்பாக முழுமையாக பேசுவோம்.

எங்களால் உள்ளே பேச முடியாவிட்டால், வெளியில் சென்று பேசுவோம். அனைவரின் விமர்சனங்களுக்கு மத்தியிலும் நாட்டை கட்டியெழுப்புவதற்கே நான் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். தனியாக முன்னெடுக்க முடியாது. எனவே, கொள்ளைகள், நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளாது நாடாளுமன்றத்தில் ஒருவர் பேசும் போது மற்றவர்கள் கூச்சலிடும் கலாசாரத்தை மாற்றுங்கள். இனியும், இவ்வாறே சென்றால் அடுத்த முறை நாங்கள் சபைக்கு வர நாடாளுமன்றம் இருக்காது – என்றார்.

## மக்கள் விடுதலை....

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் சொத்துகளை இழந்தவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். தங்களுக்கு இவ்வாறான பாதிப்பு இடம்பெறவில்லை என்பதால் இந்த பிரச்சினை குறித்து பேசவேண்டிய தேவையில்லை என எதிர்க்கட்சியினர் நினைக்கக்கூடும்.

இந்தக் குழுவை இயக்கியவர்கள் இங்குள்ள பலரின் சொத்துகளை அழித்து, ஜனநாயக ரீதியில் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாததால், அச்சுறுத்தல், கொலை செய்வதன் ஊடாக அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிப்பதை நாங்கள் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால், இன்று எங்களுக்கு இடம்பெற்ற இதே சம்பவம் நாளை அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்படக்கூடும்.

நான், அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர். என்னுடைய வீட்டுக்கு தாக்குதல் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் யாரும் வரவில்லை. மாறாக, என்னுடைய வீட்டுக்கு தாக்குதல் நடத்துவதற்கு முழுமையான திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணியே முன்னெடுத்தது.

பிரதேச சபைக்கு போட்டியிட்ட ஜே.வி.பி உறுப்பினர் ஒருவரும் அப் பகுதியிலுள்ள அமைப்பாளர் ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். எனவே, இந்த வன்முறை சம்பவங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியே (ஜே.வி.பி) பொறுப்புக்கூற வேண்டும். எனக்கு 8 வயதிருக்கும்போது, ஜே.வி.பியினரால் என்னுடைய தந்தை சுட்டுக்கொல்லப்பட்டார். அதேபோன்று, என்னுடைய முழு குடும்பமும் சேர்த்து வைத்த சொத்துகளை இன்று என்னுடைய பிள்ளைகளுக்கு 8 வயதாகும்போது, ஜே.வி.பி உடைத்து அழித்துள்ளது.

என்னுடைய, தாய், மனைவி மற்றும் குழந்தைகள் அனைவரும் வேதனைக்குள்ளாகியுள்ளனர். இந்த சம்பவம் நடந்ததிலிருந்து என்னுடைய அம்மா ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. என்னுடைய குழந்தைகள் இரவு தூங்கும்போது, வீட்டுக்கு தீ வைக்க இடமளிக்க வேண்டாம் என புலம்புகின்றனர். மேலும், என்னுடைய புத்தகங்களை கொண்டு வந்து தரச் சொல்லுங்கள் என என்னிடம் என் பிள்ளைகள் கூறுகின்றனர். இதேபோன்று, பல உறுப்பினர்கள் வேதனைக்கு உள்ளாகியுள்ளனர்.

என்னுடை வீட்டுக்கு தீ வைக்க வந்தவர்களை நான் அடையாளம் கண்டுள்ளேன். இவர்களை ஜே.வி.பியே முழுமையாக வழிநடத்தியது. ஆனால், எதனையும் அறியாது 20 வயதிற்குட்பட்ட பலர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

என்னுடைய வீட்டுக்கு தாக்குதல் நடத்தப் போவதாக 3 மணித்தியாலத்திற்கு முன்னரே எனக்கு தெரியும். பின்னர் நான் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அழைப்பை ஏற்படுத்தி விடயத்தை கூறினேன். இதனையடுத்து, 40 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக்கு வந்திருந்தனர். ஆனால், என்னுடைய வீட்டை தீயிட்டு கொளுத்தும் வரை பொலிஸார் அமைதியாக இருந்தது ஏன்? தீ வைப்பதற்கு முயற்சித்தபோது, என்னுடைய பிரதேச மக்கள் தடுக்க வந்தனர். ஆனால், நாங்கள் இதனை பார்த்துக்கொள்கின்றோம். நீங்கள் அனைவரும் சென்று விடுங்கள் என பொலிஸ் பொறுப்பதிகாரி கூறியுள்ளார். அத்தோடு, துப்பாக்கிகளை வைத்துவிட்டு நீங்கள் ஒதுங்கியிருங்கள் என என்னுடைய உதவியாட்களிடமும் பொலிஸார் கூறியுள்ளனர். என்னுடைய வாகனத்தையும் கொண்டுசெல்ல பொலிஸார் இடமளிக்கவில்லை. எனினும், இளைஞர்கள் பலவந்தமாக கொண்டு சென்று, அதனை பாதுகாத்தனர். என்னுடைய வீட்டுக்கு முன்னாலிருந்த மின்குமிழ்களை அனைத்து, வீட்டைத் தாக்குவதற்கு பொலிஸார் வழியேற்படுத்திக் கொடுத்தனர்.

என்னுடைய வீட்டிலிருந்த பொருட்களை எடுத்துச்சென்ற போதுகூட பொலிஸார் அதனை தடுப்பதற்கு முயற்சிக்கவே இல்லை. வீட்டின் பொருட்களை உடைத்தாலும் வீட்டிற்கு தீவைக்க வேண்டாம் எனக் கூறியபோதிலும், பொலிஸார் அதனை தடுக்கவில்லை. எனவே, தாக்குதலுக்கும் வீட்டை தீ வைப்பதற்கும் இடமளித்த பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இழப்பதற்கு என்னிடம் எதுவுமில்லை. நானும் என் குடும்பமும் வீதிக்கு தள்ளப்பட்டுள்ளோம். என் அம்மா பேசுவதில்லை. அவர் இறந்த பின்னராவது எனக்கு மன்னிப்பு கிடைக்குமா என்பது எனக்கு தெரியவில்லை – என்றார்.

# ஏழு எம்.பிக்களிடம் விசாரணை நடத்துவது தொடர்பில் சபாநாயகருக்கு சிஐடி அறிக்கை

## மே 09 தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பெறவேண்டுமெனவும் சுட்டிக்காட்டு




காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு அருகில் அமைதிப்போராட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு குற்றவியல் விசாரணைத் திணைக்களம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தால் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறும் அந்தத் திணைக்களம் சபாநாயகரிடம் கோரியுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, விலான் ஜயதிலக்க, சஞ்சீவ எதிரிமான ஆகிய எம்.பிக்கள் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 22 பேரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தன் பின்னர், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்ட மா அதிபரினால் பொலிஸ் மா அதிபருக்கும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கும் நேற்று முன்தினம் (16) உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளதாவது,

நாடுமுழுவதும் இடம்பெற்ற கலவரம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் 258 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, சமூக வலைத்தளங்களினூடாக தனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

குறித்த எம்.பியினால் நேற்று முன்தினம் ஹாலி-எல பொலிஸ் நிலையத்தில் கடிதத்தினூடாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹாலி–எல, பண்டாரவளை வீதியைச் சேர்ந்த நபரொருவர் அவரின் முகப்புத்தகத்தில் "சாமர சம்பத் இன்னும் உயிருடன் இருக்கிறாரா?" என்று பதிவிடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலேயே சாமர எம்.பி. பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப் பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு நேற்றுடன் 39 நாட்கள் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களின் கைபேசிகள் பறிக்கப்பட்டமைக்கு உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் கடும் கண்டனம்

நாடாளுமன்றத்தில் இன்று (17), ஆளுங் கட்சி குழுக் கூட்டம் முடிவடைந்த பிறகு, அங்கிருந்து வெளியேறும் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒளிப்பதிவு செய்த, ஊடக வியலாளர்களான பிரகீத் பெரேரா, கசுன் சமர வீர ஆகிய இருவரினதும் தொலைபேசிகள் பறிக்கப்பட்டு, அவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதை இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டித் துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தொலைபேசி ஊடாக நாடாளுமன்ற அறிக்கையிடல் நடவடிக்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளநிலையில், இவ்வாறானதொரு சம்பவம் இடம் பெற்றுள்ளமையானது, நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு கறுப்பு புள்ளியை ஏற்படுத் தியுள்ளது. நாடாளுமன்றம் தொடர்பில் மக்கள் மத்தியில் எதிர்ப்பு உருவாகியுள்ள பின்பலத்தில், ஜனநாயகத்தின் பிரதான ஸ்தாபனமாகக் கருதப்படும், நாடாளுமன்றத்தில் வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களால் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலை சாதாரண விடயமாக கருதிவிட முடியாது.

இவ்வாறான சம்பவங்கள் மீள இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்தவும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமையை தவறாக பயன்படுத்தியுள்ள சம்பந்தப்பட்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நீங்கள் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பில் அவதானமாகவே இருப்போம்.

# நன்மைகளை கருத்திற்கொண்டே விசேட குழுக்கள் நியமனம்

## ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றதன் பின்னர் மக்களின் நன்மைகளை கருத்திற்கொண்டே விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டது என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உடனடியாக எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை விரைவு படுத்துவதற்காக இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கமாகும். இதற்காக, அரசாங்கத்தின் எந்த நிதியும் செலவிடப்படவில்லை. இதனூடாக, மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் அதிகரிக்கப்படும். இதன் பிரதிபலன்கள் குறுகிய காலத்தில் மக்களுக்குக் கிடைக்கும்.

இது எந்த வகையிலும், சவால்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் அல்ல. இது தொடர்பாக, சமூக ஊடகங்களின் ஊடாக பல்வேறு கருத்துகள் வெளியிடப்படுகின்றன. அவை அடிப்படைகளற்ற குற்றச்சாட்டுகளாகும்.

அத்தியாவசியப் பொருட்களை குறைபாடின்றி வழங்குவது, மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திப்பது, உரம் மற்றும் பெற்றோல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற செயற்பாடுகள் இந்தக் குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களின் அறிக்கை பிரதமருக்கு கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்காக கொழும்பின் பல்வேறு இடங்களில் நேற்று (17) மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)


# இலங்கையின் புத்தாக்க இளம் வர்த்தக சமூகம் ஒன்றை வலுப்படுத்தியதுடன் முதலாம் கட்டத்தையும் வெற்றியுடன் நிறைவு செய்தது

START UP 2021 Powered by Dialog ENTERPRISE




இலங்கை இளைஞர்களிடையே தொழில்முனைவோர் திறன்களை வளர்த்தெடுத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு சர்வதேச தரத்தில் உருவாக்கப்பட்ட ரியாலிட்டி நிகழ்ச்சியை எமது நாட்டு பார்வையாளர்கள் மத்தியில் எடுத்துச் செல்ல கிடைத்தமையை இட்டும், நாடு எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியான கால பின்னணியில், எங்கள் இளைஞர்களை தொழில் கோரும் மனநிலையில் இருந்து விடுபடச் செய்து அவர்களிடம் காணப்படும் திறமையாலும் சக்தியாலும் தொழில்முனைவோர் கனவை நாடிச் செல்லும் இலங்கை இளைய தலைமுறையினரை அறிமுகப்படுத்துவதையிட்டும் நாங்கள் பெருமை அடைகிறோம்.

அதேவேளை, சிறப்பு வாய்ந்த இந்த இளைய தலைமுறையினருக்கு உறுதுணையாகவும் பொறுப்புமிக்க இலங்கை குடிமக்கள் ஆகவும் இருந்து, காலத்துக்கேற்ற மற்றும் நீண்ட காலத் தேவையை உணர்ந்து, எந்தவித வரையறைகளையும் விதிக்காது வியாபார துறையில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, இந்த வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு உழைத்த அனைத்து ஆலோசகர்களுக்கும் இவ்வேளையில் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று, எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து திட்டங்கள் மற்றும் மூலோபாய பங்காளிகளுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்களது இந்த வேலைத் திட்டத்தின் வழியாக வெளிக்கிளம்பிய மற்றும் பார்வையாளர்களின் அமோக வரவேற்பை பெற்றுக் கொண்ட அனைத்து இளம் தொழில் முனைவோரும் சர்வதேச சந்தையில் இலங்கையின் பெயரை நிலைநாட்டும் நோக்கத்தோடு தொடர்ந்து தமது செயல்பாடுகளை முன்னெடுப்பார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இந்த இளைஞர்களின் புகழ்பெற்ற பயணத்தின் பங்காளிகளாகவும் நலன்விரும்பிகள் ஆகவும் இருந்து செயல்பட வருமாறு நாங்கள் உங்களையும் அன்புடன் அழைக்கிறோம். மேலும், புதிய தலைமுறை தொழில் முனைவோரின் கனவுகளுக்கு வலுசேர்க்கும் தெரண STARTUP இன் இரண்டாம் கட்டத்தை விரைவில் எதிர் பாருங்கள்.

PROJECT PARTNERS

USAID FROM THE AMERICAN PEOPLE · YOULEAD · Partners for Good · Ministry of Youth & Sports

STRATEGIC PARTNERS

SLIM Sri Lanka Institute of Marketing · HARDTALK

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மே 18ஆம் திகதி, புதன்கிழமை

# தொடர்ந்துவரும் அரச அடக்குமுறை!

நாட்டில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிரிழந்தோருக்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

இலங்கை இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் இரு தரப்பிலும் இழப்புகள் ஏற்பட்டன. ஆனால், ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் காரணமின்றிக் கொல்லப்பட்டார்கள்.

ஒரு தேசத்தில் தமக்கான விடுதலையை, தமக்கான உரிமையைக் கோரிய தமிழ் மக்கள், அது கிடைக்காத பட்சத்தில் ஆயுதம் ஏந்தவேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டது.

அதன் நிமித்தம் இலங்கையை ஆட்கொண்ட யுத்தம் குறைவில்லாத துன்பங்களையும், துயரங்களையும், இழப்புகளையும் ஏற்படுத்திச் சென்றது. அதன் வடுக்களை இன்னும் மனதில் சுமந்தவர்களாக தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் போர் சிங்களவர்களுக்கு வெற்றி என்பதால் அதில் உயிர்நீத்தோரை பெரும்பாலும் மறந்துவிட்டார்கள். ஆனால், வடக்கு - கிழக்கில் தமிழர்களால் அந்த நினைவுகளையும், வலிகளையும், அதனால் ஏற்பட்ட ரணங்களையும் இலகுவில் மறந்துவிட முடியாது.

கண்முன்னே மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், உடற்பாகங்கள் சிதறிச் சிதறி சொந்தங்கள் உயிரிழந்த பரிதாபம் என நினைவுகளே மனதை உறுத்தும் நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். உரிமைக்காக போராடியோர் என்றும் பார்க்காமல் யுத்த மனிதாபிமானத்தை மீறி இலங்கை இராணுவத்தினரால் தமிழ்ப் போராளிகள் நடத்தப்பட்ட விதம் இன்னும் எங்கள் கண்களைவிட்டு அகலவில்லை.

தமிழர்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டு, அவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு சொந்த மண்ணில் அகதிகள் போன்று வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

அதைவிட, இறுதிக்கட்ட யுத்தத்தில் காரணமின்றி கொல்லப்பட்டோருக்கும், பாதிக்கப்பட்டோருக்கும் புலிகள் என்ற போர்வையில் கைதானோருக்கும் நியாயம் கிடைக்கும் என எதிர்பார்த்து அதிலும் தோல்வியே எஞ்சியது. கணவனை இழந்த மனைவிமாரின் ஆயுட்காலப் போராட்டம், தபுதாரர்களின் மனப்பிணி, பெற்றோரை இழந்து பாசத்துக்காக ஏங்கும் பிள்ளைகள், இவ்வாறு காலச்சுவட்டில் வேதனையை மாத்திரமே இந்த யுத்தம் பதிவுசெய்துள்ளது.

இத்தனையையும் தாண்டி மனிதாபிமானத்தை இழந்தோரிடம் மனித உரிமை மீறல்களுக்கான நியாயத்தை கேட்டுக்கொண்டிருக்கிறது நம் தமிழ்ச் சமூகம். விடுதலையை கோரிய சமூகமொன்றின் ஆணிவேரை அழிக்க வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்ட சிங்கள தேச அடிப்படைவாதிகளிடம் நியாயத்தையும், நேர்மையையும் எவ்வாறு எதிர்பார்ப்பது?

புலிகள் என்ற பெயரை வைத்துக்கொண்டு சம்பாதித்துக்கொண்டோரிடமும், அரசியல் இலாபம் தேடும் வஞ்சகர்களிடமும் நேர்மையை எவ்வாறு கண்டுகொள்வது?

யுத்தம் நிறைவடைந்து தசாப்தகாலம் கடந்தும் கூட அதில் உயிர்நீத்தோரை நினைவுகூர தடைவிதிக்கப்படுகிறது. எங்கே விடுதலைப் புலிகள் அமைப்பு மீளெழுந்துவிடுமோ என்ற அச்சத்தையும் தாண்டி, தமிழ்ச் சமூகத்தை ஒரு வட்டத்துக்குள் ஒடுக்குமுறையோடு வாழவைக்க வேண்டும் என்ற தீராத் தாகம்தான் இதற்குக் காரணம்.

ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளின்போது வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதும், புதிதாக சோதனைச் சாவடிகள் உருவாக்கப்படுவதும், இளைஞர் - யுவதிகள் கண்காணிக்கப்படுவதும் வழமையாகும். இம்முறையும் அந்தச் செயற்பாடுகளில் எந்த மாற்றங்களும் இல்லை.

இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் இன்றி தவிர்த்து வருகிறது. யுத்தத்தின்போது காணாமலாக்கப்பட்டோருக்கு என்னவாயிற்று என்பது இதுவரை தெரியவில்லை. காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அன்றுமுதல் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்துவருகின்ற போதிலும் தீர்வுகள் கிடைக்கவில்லை.

புலிகள் என்றும், புலிகளுக்கு உதவினர் என குற்றஞ்சுமத்தப்பட்டும் விசாரணைகள் இன்றி சிறைச்சாலைகளில் தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீது நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் அல்லது நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் மௌனம் சாதிக்கிறது அரசு.

இவ்வாறான சூழ்நிலையில் யுத்தத்தில் உயிரிழந்தோரை நினைவுகூர தமிழர்களுக்கு மாத்திரம் விதிக்கப்படும் தடைகள், அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையின்மையை மீண்டும் அழுத்தமாக பதிவுசெய்வதாகவே அமைந்துள்ளன.

ஒரே நாடு, ஒரே சட்டம் என வெறும் வாய் வார்த்தைகளால் மாத்திரம் அரசியல் செய்வதைவிடுத்து, அரச தரப்பினர் மனச்சாட்சியின்படியும், மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் இனியாவது செயற்பட முன்வர வேண்டும். ஓர் இனத்துக்கு, அதன் கடமைகளைச் செய்யவிடாது தடை ஏற்படுத்தப்படுமாயின், அது மேலும் வெறுப்புகளைத் தூண்டுமே தவிர ஐக்கியத்துக்கு வழிகோலாது என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

# மே16,17,18 - முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாட்களின் சாட்சியம்!

**இரா.தமிழ்க்கனல்**

முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய மனிதப் பேரவலம் - ஈழத்தமிழர் இனப்படுகொலையானது, தமிழ் மக்கள் வசிக்கும் நிலமெல்லாம் இன்னும் மறக்கமுடியாத ஒரு துன்பியல் நிகழ்வு. நீளும் துயரமாக இலங்கைத் தீவில் இன்னும் ஈழத்தமிழருக்கு சகஜவாழ்வு கிடைக்காத நிலையில், மறக்கமுடியாத 'மே 16-18' நாட்களின் நினைவுகளை இங்கே அசைபோடுகிறார், இறுதிப்போர் கட்டத்தில் வன்னியில் வசித்தவரும், பத்திரிகையாளரும், எழுத்தாளருமான இ.கவிமகன்.

முள்ளிவாய்க்கால் எனும் பெயரை அறியாத தமிழன் இல்லை என்று கூறுமளவுக்கு, ஓர் இனத்தின் மீதான அவலம் நிகழ்த்தப்பட்ட இடம். முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுகிய பிரதேசம், இன்று சர்வதேச அளவில் அறியப்பட்ட பகுதி!

இந்த இடத்தில் 2009ஆம் வருடத்தின் மே 16,17,18 ஆகிய நாட்களில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித அவலங்கள் எண்ணற்றவை. கொத்துக் குண்டுகள், இரசாயன குண்டுகள் என வரையறையின்றி, காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை அரசப் படைகள் நடத்தின. அதில் பல ஆயிரக்கணக்கான மக்கள் உடல் உறுப்புகளை இழந்து, உயிர்களை இழந்து, செல்லும் இடம் தெரியாமல் ஏதிலிகளாக நின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் பதுங்கு குழிகளைக்கூட அமைக்கமுடியாத நிலையில் மக்கள் இருந்தார்கள். முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு வீதியின் ஒருபுறம் கடற்கரை மணலும், அதன் மறுபுறம் வறட்சியான கழியும் கொண்ட நிலப்பரப்பு. அதனால் பதுங்கு குழிகளை அமைப்பது சிரமமாக இருந்தது. துணிகளால் அல்லது சேலைகளால் மணல் பைகளை நான்கு பக்கமும் அடுக்கி அதற்குள் தங்கினார்கள். சிலர் முடிந்தவரை கிடங்குகளைத் தோண்டி அதற்குள் தம்மைப் பாதுகாக்க முனைந்தார்கள். ஆனாலும், ஒழுங்கான பதுங்குகுழிகள் இல்லை. அதனால் அதிகமான உயிரிழப்புகள் நடந்தன.

இது ஒருபுறம் இருக்க மறுபுறம் காயம்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி இல்லாமலே இருந்தது. மண் போட்டால் மண் விழாத அளவுக்கு காயப்பட்டவர்கள் நிறைந்து வழிந்தனர். ஆனாலும், அதைச் சமாளிக்கும் அளவுக்கு மருத்துவ ஊழியர்களோ, வைத்தியர்களோ, மருந்துகளோ இருக்கவில்லை.

மருத்துவமனையின் அமைதி காணாமல் போயிருந்தது. மக்களின் அலறல் ஒலி காதைப் பிய்த்துக் கொண்டிருந்தது. அந்த சோகத் தணல் மனதை என்னவோ செய்தது. நூற்றுக்கணக்கான மக்களின் கண்ணீராலும், இரத்தத்தாலும் மருத்துவமனை இயங்கிய இடம் நனைந்துகொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் இரத்தம் பெருக்கெடுத்து ஓட, குடல்கள் சரிந்தநிலையில் பெரும் வயிற்றுக்காயங்களும், முகம் சிதைந்த நிலையில் எரிகாயங்களும் என மக்கள் குவிந்துகிடந்தனர்.

யாரும் யாருக்கும் உதவமுடியாத நிலை. ஏனெனில், எல்லோருக்கும் உயிர் பறிபோகும் நிலை! அதனால் காயமடைந்தால்கூட இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த யாரும் இல்லாமல் பலர் இறந்து போனார்கள். விழுகிற ஆட்லறி எறிகணைகள் குடும்பம் குடும்பமாக உயிர்களை எடுத்துக் கொண்டிருந்தன. நந்திக்கழி பகுதியில் (புதுக்குடியிருப்பு -முல்லைத்தீவு வீதியில் நந்திக்கடல் பக்கமாக இருக்கும் பகுதி) மே 14ஆம் தேதி இரவு மட்டும் நடந்த எறிகணைத் தாக்குதல்களில் பல குடும்பங்கள் ஒரே இடத்தில் பலியெடுக்கப்பட்டன.

மே 15ஆம் நாளன்று, மருத்துவமனை என இயங்கிய இறுதி இடமும் அரசப் படைகளின் தாக்குதல்களால் மூடப்பட்டது. முள்ளிவாய்க்கால் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடத்தில் இயங்கிவந்த அந்த மருத்துவமனையே, அரசப் படைகளின் நேரடித் தாக்குதலுக்குள்ளாகி இருந்தது. மருத்துவமனையை இராணுவம் கைப்பற்றவிருந்த நிலையில், அங்கிருந்து மக்களுக்கான மனிதநேயப் பணியாற்றிய மருத்துவர்கள், விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவுப் போராளிகள் போன்றவர்கள் உட்பட அனைவரும் வட்டுவாகல் நோக்கி நகர்ந்தனர். அதனால் அங்கே மருத்துவமனையைத் தொடர்ந்து இயக்கமுடியாமல் போனது.



ஆர்.பி.ஜி. வகை உந்துகணை மற்றும் 60 எம்.எம். எறிகணைகள், ஆட்லறி மற்றும் குறுந்தூரவீச்சு கொண்ட எறிகணைகள், மருத்துவமனை வளாகத்துக்குள் அதிகமாக வீழ்ந்து வெடித்தன. சர்வதேச விதிமுறைகளின்படி மருத்துவமனைக் கட்டடங்களின் கூரைகளில் சிவப்பு நிற (+) அடையாளம் இடப்பட்டிருந்தும், அரசப் படைகள் கண்மூடித்தனமாக மருத்துவமனை மீது தாக்குதலை மேற்கொண்டன. அதில், அங்கே அறுவை சிகிச்சை செய்துகொண்டிருந்த மருத்துவர் இறையொளி கொல்லப்பட்டார். அதன்பின் அந்த மருத்துவமனையும் கைவிடப்பட வேண்டிய நிலைக்கு ஆளானது.

அங்கே பணியாற்றிய மருத்துவர்கள், மருத்துவப் போராளிகள், உதவியாளர்கள் மனிதநேயப் பணியாளர்கள் என அனைவரும் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டிவந்தது. அதனால் “எம்மைக் கைவிட்டுச் செல்லாதீர்கள்.. எங்களைக் காப்பாற்றுங்கள்... ஆமி பிடிச்சா எங்களைச் சுட்டுப் போடுவான்...” எனக் கதறி அழுதுகொண்டிருந்த காயமடைந்தவர்களைக் கைவிட்டு வெளியேறினார்கள். காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டவர்கள் மருத்துவமனைக்குள்ளேயே மீண்டும் காயமடைந்தார்கள். அதில் பலர் உயிரிழந்தனர். உயிர் தப்பியவர்கள் அரசப் படைகளால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கூறியபடி சுட்டுக் கொல்லப்பட்டார்களா, இல்லையா என்பது அறியாத நிலை.

வயிற்றில் காயமடைந்து அறுவை சிகிச்சை செய்யப்பட்ட வயதான தாய் ஒருவர், இராணுவம் தன்னைச் சுட்டுவிடும் என்ற பயத்தில் நிலத்தில் அரற்றி அரற்றி மருத்துவமனையிலிருந்து வெளியேற முற்பட்டபோது மருத்துவ உதவியாளர் ஒருவர், அந்தத் தாயை தூக்கிச் செல்ல ஓடி வந்தார். ஆனால், சிங்கள அரசப்படை ஏவிய எறிகணை அவர்களின் அருகில் விழுந்து இருவருமே சாகடிக்கப்பட்டனர். இவ்வாறு சாவுகள் சாதாரணமாகி அந்த மருத்துவமனைக் கட்டடம் சிதைந்துபோனது.

முள்ளிவாய்க்கால் பகுதி - உண்டியல் சந்தி முதல் வட்டுவாகல் வரையாக கிட்டத்தட்ட 3 ச.கி.மீ. பரப்புக்குள் முடக்கப்பட்டு, அங்கு வாழ்ந்த 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்களால் திணறியது. அங்கே சாதாரணமாக ஒரு கைக்குண்டு வெடித்தாலும் பல நூறு உயிர்கள் பிரியும்நிலை. அதற்குள் விடுதலைப் புலிப் போராளிகளும் இருந்தார்கள். பெரும்பாலும் மக்கள் வாழ்ந்த இடங்களைத் தவிர்த்து அவர்கள் இருந்தாலும் குறுகிய நிலப்பரப்புக்குள் அது சாத்தியமற்று இரு பகுதியினரும் சேர்ந்து வாழவேண்டிய சூழல் உருவாகியிருந்தது. அதனால் அரசப் படைகள் புலிகள் மீதான இறுதித் தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என பிரசாரத்தை முன்னெடுத்துக் கொண்டு மக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தது.

அதுவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் காயமடைந்தவர்களை திருகோணமலைக்கு கொண்டுசெல்வதற்கென வருகைதந்த கப்பல்கூட நின்றுபோனது. அதற்கும் அரசாங்கம் தடைவிதித்திருந்தது. அதற்கு முந்தைய நாட்களில் கப்பல் வந்து செல்லும்போதுகூட அரசப் படைகளின் பீரங்கிப்பிரிவு கப்பல் தரித்து நின்ற இடத்தைச் சுற்றி கடலில் எறிகணைகளை ஏவினர். அதனால் காயமடைந்த மக்கள் கப்பலுக்குச் சென்றால் இறந்துவிடுவோமோ என அஞ்சி கப்பலுக்குப் போக பயம்கொண்டனர். இது ஒருபுறம் இருக்க இப்போது கப்பலை முற்றுமுழுவதுமாக தடுத்துவைத்தது இலங்கை அரசு. அதனால் முள்ளிவாய்க்கால் பகுதி முழுவதும் காயமடைந்தோர் இறந்து கொண்டிருந்தார்கள். இறந்தவர்களை அடக்கம்செய்யக்கூட முடியாமல் உயிரற்ற சடலங்கள் அப்படியே கிடந்தன. மனிதநேயப் பணியாற்றிய போராளிகளின் மருத்துவப்பிரிவு மருத்துவர்கள், நிர்வாக சேவை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பொலிஸ் போன்ற பிரிவுகள் தொடர்ந்தும் தமது வளங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு மருத்துவம் பார்த்தனர். ஆனாலும், காயங்கள் அதிகமானதால் அவர்களால் எதையும் செய்யமுடியாத கையறு நிலைக்குச் சென்றனர்.

இந்நிலையில், உண்டியல் சந்தி முதல் கடற்கரைப் பக்கமாக உள்நுழைந்து கொண்டிருந்த அரசப் படைகள் நேரடித் துப்பாக்கித் தாக்குதல்களை தீவிரப்படுத்தின. அதனால் மக்கள் வட்டுவாகல் நோக்கி நகர்ந்தனர். இன்னும் சுருங்கிக்கொண்டருந்த குறுகிய பிரதேசத்துக்குள் மக்களின் சாவுகள் அதிகரித்துக்கொண்டிருந்தன. வான்படை, கடற்படை என்ற வித்தியாசம் இன்றி வட்டுவாகலை நோக்கி போய்க்கொண்டிருந்தவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க )




## இன்றைய நாளில்...

- 1804 – முதலாம் நெப்போலியனை பிரெஞ்சு மன்னனாக மேலவை தெரிவுசெய்தது.
- 1912 – முதலாவது இந்தியத் திரைப்படமான ஸ்ரீ பந்தாலிக் மும்பையில் வெளியிடப்பட்டது.
- 1969 – அப்பல்லோ-10 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1974 – 'சிரிக்கும் புத்தர்' என்ற பெயரிடப்பட்ட திட்டத்தில் இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதித்தது.
- 1984 – அன்னலிங்கம் பகீரதன் சயனைட் அருந்தி உயிர்நீத்த முதலாவது விடுதலைப்புலி போராளி என்ற பெருமையைப் பெற்றார்.
- 2005 – ஹபிள் விண்வெளித் தொலைநோக்கி, புளூட்டோ கிரகமானது நிக்ஸ், ஐதரா ஆகிய மேலதிகமாக இரு நிலவுகளைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தியது.
- 2006 – நேபாளம் மதச்சார்பற்ற நாடாகவும், அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.
- 2009 – 26 ஆண்டுகள் நீடித்த ஈழப்போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. இலங்கையும், அதன் நட்பு நாடுகளும் ஒருசேர 53,000 இற்கும் மேற்பட்ட பூர்வகுடி தமிழ் மக்களைக் கொன்ற நாள் என தமிழர்கள் குற்றஞ்சாட்டிய நாள்.



# மே 09 வன்முறைச் சம்பவம் நீதி நிலைநாட்டப்படுகிறதா?

## வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு பகுதிகளில் 664 பேர் கைது

கொள்ளுப்பிட்டி மற்றும் காலிமுகத்திடல் பகுதிகளில் கடந்த 09 ஆம் திகதி இடம்பெற்ற கலவரம் தொடர்பில் 664 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த 24 மணி நேரத்தில் 258 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 67 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 43 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மேலும், கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்ட மற்றுமொரு குழுவினர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் இதுவரை கைது செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கையில் 206 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 272 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மாகாணங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களின் மேற்பார்வையில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் மீது சட்டவிரோதமாக கூடுதல், தாக்குதல், காயம், சொத்துகளை அழித்தல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்படவுள்ளது.

இதேவேளை, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 791 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவற்றில் மேல் மாகாணத்தில் இருந்து 444 முறைப்பாடுகளும், தென் மாகாணத்தில் இருந்து 118 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்டமா அதிபரின் பணிப்புரைக்கு அமைய நேற்று இருவர் கைது

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா மற்றும் மாநகரசபை ஊழியர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

'மைனா கோ கம', 'கோட்டா கோ கம' ஆகிய இடங்களில் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுத்தோர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 22 பேரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் அறிவுறுத்தல் வழங்கினார். முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, மிலன் ஜயதிலக்க, மொரட்டுவை மேயர் சமன்லால் பெர்னாண்டோ, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்கேமகே, டேன் ரியசாத் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இதனடிப்படையிலேயே விசாரணைகளை மேற்கொண்டுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இருவரை கைதுசெய்துள்ளனர்.

## நியாயம் பெற்றுக்கொடுக்கப்படும்; அமைச்சர் பிரசன்ன நம்பிக்கை

நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக வீடுகள் மற்றும் சொத்துகள் சேதமடைந்த அனைவருக்கும் நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வாசஸ்தலத்துக்கு முன்பாக கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தின் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற, பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை இலக்கு வைத்து வீடுகள் மற்றும் சொத்துகள் தீயிட்டு அழிக்கப்பட்ட பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்காக விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கிய குற்றச்சாட்டில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கைது

அலரிமாளிகைக்கு முன்னாலும் காலிமுகத்திடலிலும் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரான அமல் சில்வா உள்ளிட்ட மூவர் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரில் இருவருக்கிடையில் மொரட்டுவை மாநகர சபையின் நகரசபை பணியாளர் ஒருவரும் இருப்பதாக குற்றப்புலனாய்வு திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் (16) இரவு மொரட்டுவ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் அஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சந்தேக நபர்களை கைதுசெய்வதில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பொலிஸ் அதிகாரிகளால் அழுத்தம்

அலரிமாளிகைக்கு முன்பாகவும் காலி முகத்திடலிலும் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியோர் மீது தாக்குதல் நடத்தியோரை கைதுசெய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகள் இருவர் அழுத்தம் பிரயோகிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.




குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் இருவருக்கு பொலிஸ் உயர் அதிகாரிகள் இருவர் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் நடத்திய முக்கிய நபர்கள் சிலர் கைதுசெய்யப்படுவதிலிருந்து தடுப்பதற்காக இவ்வாறு உயர் அதிகாரிகள் அழுத்தம் கொடுப்பதாக அறியமுடிந்தது.



## ஆயிரம் பேர் அடையாளம்; பலர் தலைமறைவு

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஆயிரம் பேர் முதற்கட்டமாக அடையாளங்காணப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், பலர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களைக் கைதுசெய்வதற்கு விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ளோரை தேடிக் கண்டுபிடிப்பதற்காக அவ்வந்த பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் தலைமையகத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொறுப்பதிகாரிகள் எண்மர் அடங்கிய குழு நியமனம்

அநுராதபுர மாவட்டத்தில் கடந்த 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தோரை கண்டறிவதற்காக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் எண்மர் அடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத்தின் பணிப்புரைக்கமைய, பிரதிப் பொலிஸ்மா அதிபர் லக்சிறி விஜேசேனவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அநுராதபுரத்தில் வன்முறைகளில் ஈடுபட்டோரில் 75 வீதமானோர் அடையாளங்காணப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.



## போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலை தடுக்க முயன்றோம் உயர் அதிகாரிகள் இருவர் அதற்கு இடங்கொடுக்கவில்லை

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தென்னக்கோன் சாட்சியம்

(நமது விசேட செய்தியாளர்)

காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை தடுப்பதற்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் பாதுகாப்பு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட உயர் அதிகாரிகள் இருவர் அதற்கு இடங்கொடுக்கவில்லையென மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு உயர் அதிகாரிகள் இடங்கொடுக்காத காரணத்தினால் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலரிமாளிகையிலிருந்து போராட்டக்காரர்களை தாக்குவதற்காக வந்த குழுவினர் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகமோ தண்ணீர்த் தாரைப் பிரயோகமோ மேற்கொள்ள வேண்டாம் என அவர்கள் தொலைபேசி ஊடாக அழுத்தம் கொடுத்ததாகவும் ஆணைக்குழு முன்னிலையில் தேசபந்து தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைத்த தகவல்களின் பிரகாரம், அலரிமாளிகைக்கு வந்த குழுவினரை காலிமுகத்திடலுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். அங்கு வருகை தருபவர்களை வேறு வழியில் செல்வதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்நிலையில், அந்தக் குழுவினரை நவம் மாவத்தையூடாக அனுப்புவதற்கு தேசபந்து தென்னக்கோன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

எனினும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த உள்ளிட்ட



குழுவினர் 'மைனா கோ கம', 'கோட்டா கோ கம' ஆகியவற்றுக்குச் செல்ல முற்பட்டனர் என தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய சாட்சியின் பிரகாரம், அலரிமாளிகையிலிருந்து வெளியேறுபவர்கள் மீது எந்தத் தடையும் விதிக்க வேண்டாம் என சனத் நிஷாந்த தன்னிடம் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக அறிந்த பொலிஸார் அதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும், சிரேஷ்ட பொலிஸ் உயர் அதிகாரியொருவர் அதனை தடுக்கும் வகையில் தேசபந்து தென்னக்கோனுக்கு தொலைபேசி மூலம் அழைத்து அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதேவேளை, காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்போது அதனை தடுப்பதற்காக குண்டர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மற்றும் தண்ணீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அறிவுறுத்தல் வழங்கியதாக தேசபந்து தென்னக்கோன் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

# மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலைக்கு அஞ்சலி




(சாவகச்சேரி நிருபர்)

இன விடுதலையைத்தேடி முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணத்தின்போது சாவகச்சேரியில் அமைந்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணம் சாவகச்சேரியை நேற்று முன்தினம் (16) வந்தடைந்த நிலையில் தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக அமைந்துள்ள ரவிராஜின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்குபற்றிய பின்னர் முள்ளிவாய்க்கால் நோக்கிய தமது பயணத்தை தொடர்ந்திருந்தனர்.

# முள்ளிவாய்க்காலில் சாவடைந்த ஆன்மாக்களின் கர்மாவை துரோகமிழைப்பவர்களும் அனுபவிப்பர்

## நினைவேந்தல் செய்தியில் முன்னாள் எம்.பி. சரவணபவன்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் சிக்குண்டு சிதையுண்டு போன ஆன்மாக்களின் கர்மா எப்படி எதிரிகளை பாடாய்படுத்துகின்றதோ அதேபோன்று அந்த ஆன்மாக்களுக்கு துரோகமிழைத்தவர்களையும், துரோகமிழைப்பவர்களையும் பாடாய்படுத்தும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 13ஆவது ஆண்டு இன்று புதன்கிழமை கடைப் பிடிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மூச்சுக்கூட விடமுடியாத ஒடுங்கிய நிலப்பரப்புகள் இலட்சம் தமிழர்களை அடைத்து, அவர்கள் மீது எறிகணைகளையும், கொத்துக்குண்டுகளையும், பொஸ்பரஸ் குண்டுகளையும் பொழிந்து தள்ளி அழித்தொழித்தது அரச பயங்கரவாதம். சிங்கள – பௌத்தம் ஊட்டிய போதையில் திளைத்து நின்று தமிழர்களை வேட்டையாடிய இலங்கை அரசின் அந்தக் கொடூரத்தை இப்போது நினைத்துப் பார்த்தாலும் இதயம் கனக்கின்றது.

பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு சிங்கள தேசம் இப்போது துடிக்கின்றது. இதைவிடப் பன்மடங்கு வலியை – வேதனையை – துயரத்தை எம்மக்களும்தான் சுமந்து நின்றார்கள். உணவில்லை, மருந்தில்லை, உயிருக்கு உத்தரவாதமில்லை என்ற மரணத்தின் பாதையிலேயேதான் பயணித்தார்கள். எவரும் மனமிரங்கவில்லை. எந்த வல்லரசும் வளைந்து கொடுத்து எம்மவர்களை மீட்கவுமில்லை.

கற்பனைகூட செய்து பார்க்க முடியாத நவீன யுகத்தின் மிகப்பெரும் மனிதப் பேரவலம் நடந்தேறி 13ஆண்டுகளாகின்றன.

முள்ளிவாய்க்காலில் சாவை அணைத்துக்கொண்ட ஆன்மாக்கள் 13 ஆண்டுகளாக அழுதுகொண்டிருக்கின்றன. தங்களின் நீதிக்காக ஏக்கத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. ஆன்மாக்களை மிஞ்சிய சக்தி எதுவுமில்லை என்பதை அவை இப்போது நிரூபித்துக்கொண்டிருக்கின்றன. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பது நிதர்சனமாகிக்கொண்டிருக்கின்றது.

எந்த மக்கள் எங்களின் எதிரிகளைத் தூக்கிக் கொண்டாடினார்களோ அவர்களே எதிரிகளை இப்போது தூக்கி மிதித்துக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் அனுபவித்த மரண பயத்தையும் எதிரிகளுக்கு காட்டியிருக்கின்றார்கள். நாங்கள் பயந்து பயந்து பங்கருக்குள் பதுங்கியதைப்போன்று எதிரிகளையும் பதுங்க வைத்திருக்கின்றார்கள்.

எதிரிகளுக்கு தூக்குக்காவடி தூக்கியவர்களும் எங்கள் ஆன்மாக்களின் கர்மாக்களை எதிர்கொண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த ஆன்மாக்கள் எந்த இலட்சியத்துக்காக – எந்தத் தாகத்துக்காக – தாயகத்துக்காக செத்து மடிந்தனவோ அதைத் தூக்கியெறிந்துவிட்டு, அந்த ஆன்மாக்களையே கூனிக்குறுக வைக்கும் மிகமோசமான துரோகமிழைப்பவர்களும் கர்மாவிலிருந்து தப்ப முடியாது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்போம் என்று கூறிக்கூறியே அதை மழுங்கடிப்பவர்களும், அந்த ஆன்மாக்களின் இலட்சியத்தை நீர்த்துப்போகச் செய்பவர்களும் இனிவரும் நாட்களில் கர்மாவை அனுபவிப்பார்கள்.

எந்தவொரு சமரசத்துக்குமிடமின்றி – விட்டுக்கொடுப்புமின்றி – கடைசிக்கணம் வரையில் - தமிழர்களின் சுதந்திரத் தாயகத்துக்காக மடிந்த அந்த ஆன்மாக்களுக்கு, நாமும் நேர்வழியில் - விசுவாசமாக – அவர்கள் மீது சத்தியம் செய்து நீதியையும், சுதந்திர தமிழர் தாயகத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் உறுதிபூணுவோம்.

அந்த உறுதியைக் காப்பாற்ற எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்குத் தயாராகுவோம் - என்றுள்ளது.

# கொக்குவிலில் பல்கலை மாணவிகள் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

4 மோட்டார்சைக்கிள்களில் வந்த குழு வீட்டுக்குள் புகுந்து ஜன்னல்கள், கதவுகளை சேதப் படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, குறித்த வீட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவிகள் வாடகைக்கு தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழில்



(யாழ். நிருபர்)

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கந்தர் மடம் பகுதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக காலை 9 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அவ்வமைப்பின் தலைவர் பொ.ஐங்கரநேசன் மற்றும் சக உறுப்பினர்களால் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வீதியால் பயணித்த பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

# கடற்றொழிலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியிலிருந்து கடற்றொழிலுக்கு சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை உதயபுரம் பகுதியை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டென்சில் ராஜேந்திரன் (வயது 53) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவரது மகனுடன் தொழிலுக்கு சென்றவேளை, கடலில் தவறி விழுந்து காணாமல்போய் மீனவர்கள் தேடியபோது நேற்று செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



பதுளை – ரொக்கில் அருள்மிகு ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா நேற்று வெகு விமர்சையாக இடம்பெற்றது. இதன்போது வசந்த மண்டப பூஜைகளைத் தொடர்ந்து பிரதான கும்பம் எடுத்து வரப்பட்டது. பின்னர் முப்பெரும் தெய்வங்களின் வெளிவீதி உலா இடம்பெற்றது. (பதுளை நிருபர்)

# போட்ரி தோட்டத்தில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போட்ரி தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நால்வர் நேற்றுமுன்தினம் (16) பகல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கெசல்கமுவ ஓயா வனப்பகுதிக்கு அண்மித்த பகுதியில், சுற்றாடலுக்கு பாரிய அழிவை ஏற்படுத்தும் வகையில் மிக நீண்டகாலமாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவை மற்றும் நோர்வூட் பகுதிகளைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர்கள் நால்வரும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

---

# எருமை மாட்டை இறைச்சிக்காக வெட்டிய சந்தேக நபர் கைது

(கண்டி நிருபர்)

வத்துகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோதமாக எருமை மாடு ஒன்றை இறைச்சிக்காக வெட்டிக்கொண்டிருந்த சந்தேக நபர் ஒருவரை வத்துகாமம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

வத்துகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த உடதலவின்ன பிரதேச காட்டுப்பகுதியை சுற்றிவளைத்த வத்துகாமம் பொலிஸார், அங்கிருந்து 219 கிலோ இறைச்சியையும் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# கையாலாகாத அரசை விரட்டியடிக்க மலையக இளைஞர் யுவதிகளும் கைகோர்க்க வேண்டும்

## மத்திய மாகாண முன்னாள் உறுப்பினர் இராஜாராம்

(தலவாக்கலை நிருபர்)



நாட்டில் டொலர் பற்றாக்குறை உட்பட பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பின் மூலம் இந்த நாட்டிற்கு இன்றும் டொலர் கிடைத்துக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், இன்னும் இந்த தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளத்தைகூட இந்த அரசாங்கத்தால் பெற்றுக்கொடுக்க முடியாமல் உள்ளது.

எனவே, நாட்டு இளைஞர் யுவதிகள் எந்தவித இன, மத, கட்சி பேதமுமில்லாமல் ஒன்றிணைந்து கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நடத்திவரும் உணர்வுபூர்வமான பேரெழுச்சி போராட்டத்திற்கு மலையக இளைஞர் யுவதிகளும் தமது முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவித உதவிகளும் சலுகைகளும் வழங்காத கையாலாகாத அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் வரை மலையக இளைஞர் யுவதிகளான நாமும் கைகோர்த்து இணைந்து போராடவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்த பின்னர் தற்பொழுது புதிய பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இளைஞர் யுவதிகள் நடத்திய போராட்டத்தால் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரம் பதவி விலகியுள்ளார். இன்னும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவில்லை. ஜனாதிபதி விலகும் வரை தொடர்ந்து நடத்தும் இந்த போராட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இனவாதம் பேசுபவர்களுக்கு நல்ல பாடத்தினை இளைஞர் யுவதிகள் புகட்டியுள்ளனர். எந்த ஒரு நாட்டிலும் இனவாதம், மதவாதம் பேசும் அரசியல்வாதிகள் நீண்ட காலம் ஆட்சியில் நிலைத்திருந்ததில்லை. நாட்டில் பட்டனி பஞ்சம் நீங்கி திருட்டை ஒழித்து சமத்துவம் ஒற்றுமையை நிலைநாட்ட ஒரு நல்லாட்சியை கொண்டுவர வேண்டும் என்பதற்காகவே இன்று இளைஞர்கள் ஒன்று கூடியுள்ளார்கள்.

விதைக்கப்பட்ட விதையும் உச்சரிக்கப்பட்ட வார்த்தைகளும் சும்மா இருக்காது. அன்று இனவாதத்தையும் மதவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் இந்த அரசாங்கம் விதைத்தது. அதனால் இன்று அதனை அறுவடை செய்யும் காலகட்டத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினர் இருக்கின்றனர் என்றார்.

# ஊரடங்கால் நுவரெலியா பழவியாபாரிகள் பாதிப்பு பழங்கள் குப்பைக்கு செல்லும் அவலநிலை!

(செ.திவாகரன்)



கொழும்பு காலிமுகத்திடல் உட்பட நாட்டின் பல பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் பதிவானதையடுத்து உடன் அமுலாகும் வகையில் நாடு முழுவதும் கடந்த 9ஆம் திகதி முதல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பொதுமக்களை விட வியாபாரிகள் பெரிதும் கவலைக்குள்ளாகியுள்ளதாக நுவரெலியா நகர பழ வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் நுவரெலியா நகர பழவியாபாரி ஒருவர் கூறுகையில், ஊரடங்கு காலத்தில் குறிப்பிட்ட நேரத்திற்குள் பழங்கள் அனைத்தும் பெரும்பாலும் விற்றுவிடுவதில்லை. ஒரு சில பழ வகைகள் மட்டுமே விற்பனையாகின்றன. ஒரு சில பழ வகைகள் மட்டும் ஓரிரு நாட்கள் அழுகாமல் தாக்குப்பிடிக்கக் கூடியதாக உள்ளது. அதனை வைத்து வியாபாரம் செய்ய முடியும். மற்ற பழ வகைகள் எல்லாம் விற்பனையாகாமல் அழுகிவிடுகின்றன. இதனால் கடந்த காலங்களை போல் மேலதிக பழங்களை கொண்டுவரமுடியாத இக்கட்டான நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இக்காலத்தில் 20ஆயிரம் தொடக்கம் 30ஆயிரம் ரூபா வரையிலான பெறுமதியான பழங்கள் அழுகி வீணாகின்றன. என்னைபோன்ற ஏனைய பழவியாபாரிகளுக்கும் இதேநிலை தான்.

ஊரடங்கு நாட்களில் அழுகி வீணாகும் பழங்களை மாடுகளுக்கு உணவாக கொட்டுகிறோம். சில நேரங்களில் குப்பைகளில் கொட்டுகின்றோம், அல்லது குழித்தோன்றி புதைக்கின்றோம்.இதனால் எமது வாழ்வாதாரமே பாதிக்கப்படுகிறது.

இனிவரும் காலங்களில் திடீர் ஊரடங்கு அறிவிக்கப்பட்டால் எங்களைப்போன்ற வியாபாரிகளுக்கு கிராமங்களில் அல்லது தோட்டப்புறங்களில் சென்று வியாபாரம் செய்வதற்கு அனுமதி கொடுத்தால் எங்கள் வாழ்வாதாரம் ஓரளவாவது பாதிக்காமல் இருக்கும். இதனை உரிய தரப்பினர் கவனத்திலெடுக்க வேண்டும் என்றார்.

# நிதி பற்றிய ஆலோசனைச் சபையின் தலைமைத்துவத்தை ஏற்கத் தயார்

## நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே தனது குறிக்கோளென்கிறார் ஹர்ஷ எம்.பி.

சர்வகட்சி பொருளாதார மறுமலர்ச்சித் திட்ட மொன்றை கட்டியெழுப்புவதற்காக நிதி பற்றிய ஆலோசனைச் சபையின் தலைமைத்துவத்தை ஏற்க தான் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவரது முகப்புத்தகக் கணக்கில் பதிவொன்றை இட்டே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதுள்ள நிலையில் அனைத்துக் கட்சிகளை யும் உள்ளடக்கும் வகையிலான சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்க முடியாது. அதற்குக் காரணம், மக்களின் நிலைப்பாட்டுக்கு தலைகுனிந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்காமையாகும். கொள்கைகளை காட்டிக்கொடுத்து அரசாங்கத்துடன் இணைந்து மக்கள் போராட்டத்துக்கு எதிராக நான் செயற்படப்போவதில்லை.

எது எவ்வாறாயினும், தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க நான் எதிர்காலத்தில் முக்கியமான தீர்மானங்களை எடுப்பேன். அதற்காகவே, நாடாளுமன்ற நிதி பற்றிய ஆலோசனைக் சபையின் தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறேன். அதற்காக ஐக்கிய தேசியக் கட்சி எனது பெயரை பரிந்துரை செய்துள்ளதுடன், அதற்கு ஆதரவு கிடைக்குமென நம்புகிறோம்.

நிதி பற்றிய ஆலோசனைச் சபையின் தலைமைத்துவப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர், சர்வகட்சி குழுவினூடாக பொருளாதார மறுமலர்ச்சித் திட்டமொன்றை வகுப்பதற்கு தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொடுக்கவே எதிர்பார்க்கிறேன். அதன் பின்னர், அந்த திட்டங்களுக்காக நாடாளுமன்றத்தில் அனுமதியை பெற்றுக்கொண்டு அதனை நடை முறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் எதிர்பார்க்கிறேன். சர்வகட்சிகளும் தலையிட்டு இந்தப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகவே, நிதி பற்றிய ஆலோசனை சபையின் தலைவர் பதவியினூடாக மக்களின் அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியும் என நான் நம்புகிறேன்.

நிதி பற்றிய அதிகாரம் முழுமையாக நாடாளுமன்றத்துக்குரியது என்பதுடன், நிதி பற்றிய ஆலோசனைச் சபையின் அனுமதியின்றி நாடாளுமன்றத்தில் எவ்விதமான நிதி பற்றிய சட்டங்களையும் நிறைவேற்ற முடியாது. அந்தளவுக்கு இந்த ஆலோசனைச் சபை பலம் படைத்ததாகும். மக்களின் எதிர்பார்ப்பை பாதுகாத்து இதுபோன்ற முறையினூடாக நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் எனது சேவையை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறேன்.

மக்களின் விருப்பிற்கு எதிராக அமைக்கப்பட உள்ள புதிய அரசாங்கத்துடன் நான் ஏன் இணைந்து கொள்ளவில்லை என பலர் கேள்வி எழுப்புவதால் இதனை தெளிவுபடுத்துகின்றேன்.



தற்போதைய பிரச்சினை ஏற்பட்டமைக்கான காரணம் என்ன என்பதை முதலில் சுருக்கமாக கூறுகின்றேன். இந்த நிலைமைக்கு பிரதான காரணம், இந்த நாட்டில் காணப்படுகின்ற படுமோசமான அரசியல் கலாசாரமாகும்.

நாட்டை பற்றி கவனிக்காத, பொருளாதார திட்டம் மற்றும் கொள்கை தொடர்பில் கவனிக்காத அதிகாரத்தின் மீது கொண்ட ஆசை மற்றும் வரப்பிரசாதங்களின் மீது கொண்ட மோகம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட அரசியலே தற்போதைய இலங்கை அரசியலாகும். பல்வேறு கதைகளைகங கூறி ஆட்சியை கைப்பற்றுவதே அவர்களின் பொழுதுபோக்காகும்.

நான் அரசியலுக்கு வந்தது எனக்கொரு வேலை இல்லாமையினால் அல்ல. இலங்கையினை இவ்வுலகில் மின்னும் தாரகையாக மாற்றுவதற்காக எனது முழுமையான பங்களிப்பை வழங்குவதே எனது நோக்கமாகும். அதற்கான சிறந்ததொரு சந்தர்ப்பமே இதுவாகும். புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் முயற்சியில் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் மிகவும் நேர்த்தியான அரசியல் கலாசாரத்தையே எதிர்பார்க்கின்றனர். அதற்கு எதிராக என்னால் ஒருபோதும் செயற்பட முடியாது. நிதியமைச்சராக பதவியேற்குமாறு பல தரப்பினரும் என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர். நான் அவற்றை ஏற்கவில்லை. மக்கள் இவ்வாறான அரசியல் விளையாட்டை எதிர்பார்க்கவில்லை.

குடும்பமொன்றினை பாதுகாப்பதற்காக இவ்வாறு அரசியலில் ஈடுபடுவதை விட வீட்டுக்கு செல்வதே மேல். நாட்டு மக்களின் விருப்புக்கு இடமளிப்பதாகவே ஜனாதிபதியின் தீர்மானம் இருந்திருக்க வேண்டும். அதற்காக நாங்கள் பல முறை ஜனாதிபதியிடம் பேச்சுவார்த்தை நடத்திய போதும் அவை வெற்றியளிக்கவில்லை.

மக்கள் புறக்கணித்த அதிகார வர்க்கத்தினை பாதுகாப்பதைவிட அதனை தகர்த்தெறிவதே இன்றைய தேவையுமாகும். நான் ஒருபோதும் தனிப்பட்ட இலாபத்திற்காக கொள்கையை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. இன்று அனைவரும் ஜனாதிபதியை பதவி விலகுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

அதனை அரசியல் சுய இலாபத்திற்காக மறைக்க முடியாது. சுய இலாப அரசியலிலிருந்து நாட்டை பாதுகாத்து பரிசுத்தமான நாட்டை கட்டி எழுப்புவோம் - என்றார்.

# நாடாளுமன்றத்தில் ஊடகவியலாளர்களின் கைபேசிகள் பறிப்பு

## ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு சஜித் கோரிக்கை



நாடாளுமன்றத்தில் ஊடக அறிக்கையிடலை மேற்கொள்ள சமுகமளித்த இரண்டு ஊடகவியலாளர்களை பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தி அவர்களது கையடக்கத் தொலைபேசிகளை கைப்பற்றியதாகவும் குறித்த தொலைபேசிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு சபாநாயகர் மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், குறித்த ஊடகவியலாளர்களை துன்புறுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரகீத் பெரேரா மற்றும் சுதந்திர ஊடகவியலாளரான கசுன் சமரவீர ஆகியோர் இன்று (17) தமது செய்தி தொகுப்பு கடமைகளில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசிகள் பறிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கலந்துரையாடலின் பின்னர் அங்கிருந்து வெளியேறும் சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட ஊடகவியலாளர்களின் கையடக்கத் தொலைபேசிகள் இவ்வாறு பறிக்கப்பட்டுள்ளன.

நான் நேரடியாக அந்தச் சம்பவத்தை பார்க்காததால் எந்த நாடாளுமன்ற உறுப்பினர் அந்த தொலைபேசிகளை பறித்தார் என்பதை உறுதியாக குறிப்பிடமுடியாது. ஆகவே, அந்த கைபேசிகளை மீள பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

ஊடகம் என்பது ஜனநாயக முறைமை யின் தூண் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதன் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதனை, தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் நன்கு புரிந்து வைத்துள்ளார்.

அவர் சுதந்திர ஊடகத்துக்காக முன்னிருந்தவர் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். மேலும் ஜனநாயக ரீதியான சுதந்திரமான சூழலை ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# போரில் உயிர்த்தியாகம் செய்தோரின் ஆன்ம ஈடேற்றத்துக்கு இனத்தின் மீட்சி அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவிப்பு

**(சாவகச்சேரி செய்தியாளர்)**

எம் இனத்தின் மீட்சியே பல ஏக்கங்களோடு உயிர்த் தியாகம் செய்த எம்மவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழியமைக்கும் என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பிய விசேட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் மௌனித்து பதின்மூன்று வருடங்கள் ஆகியுள்ளபோதிலும் மூன்று தசாப்த கால உள்நாட்டு யுத்தம் எமது மக்கள் மனங்களில் பல வடுக்களை ஆழமாக பதித்துவிட்டுச் சென்றுள்ளது.

முப்பது வருட கால யுத்தத்தில் நாம் இழந்தவை ஏராளம். அந்த இழப்புகளை ஒருபோதும் ஈடுசெய்ய முடியாது. ஆனால், படிப்படியாக விழுந்த இடத்திலிருந்து மீண்டெழ முடியும்.

அந்த மீட்சியே எமது உறவுகளின் ஆத்ம சாந்திக்கு வித்திடும். எமது இனத்தின் மீட்சி கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. நாம் கல்வி மற்றும் பொருளாதார



ரீதியாக முன்னேறும் பட்சத்தில் இழந்தவற்றில் பலவற்றை மீள அடைய முடியும். உயிர்த்தியாகம் செய்தவர்களை மீளப் பெற முடியாவிட்டாலும் அவர்களின் ஆசீர்வாதம் எமது அடுத்த சந்ததியின் முன்னேற்றத்திற்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன்.

யுத்த வடுக்களை மனதிலும், உடலிலும் சுமக்கும் உறவுகளின் மீட்சிக்கு நாம் ஒவ்வொருவரும் கை கொடுக்க வேண்டும். கடந்த காலத்தில் அதற்கான பல முயற்சிகளை நான் எடுத்திருக்கிறேன். எதிர்காலத்திலும் உங்கள் பிரதிநிதியாக உங்கள் வளர்ச்சிக்கு கை கொடுப்பேன் - என மேலும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

### பிரச்சினைக்குத் தீர்வை...

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு நேற்று (17) அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

முழு நாட்டு மக்களின் கோரிக்கையாகவுள்ள ‘கோட்டா கோ ஹோம்’ என்பதை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியேயும் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? அதற்கான உரிய திகதி மற்றும் காலம் என்ன?

ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்கு கொழும்புக்கு வந்து நாட்டை இரத்த ஆறாக மாற்றிய ராஜபக்ஷவின் வன்முறையாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நாடாளுமன்ற, உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் தொடர்பாக எடுக்கும் சட்ட நடவடிக்கைகள் என்ன?

அத்தோடு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் மற்றும் 21ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தல் உள்ளிட்ட ஜனநாயக விடயங்களை துரிதப்படுத்துதல்.

நாட்டின் அராஜகத்திற்கு வழிவகுத்த மற்றும் தோல்வியடைந்த தலைவர்கள் உருவாக்குவதற்கு காரணமாக இருந்த ஈஸ்டர் தாக்குதல் திட்டத்திற்கு தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்தல், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதோடு, தேவை ஏற்பட்டால், பாரபட்சமற்ற சர்வதேச விசாரணையை நடத்துதல்.

இந்த நாட்டில் அராஜகத்திற்கு வழிவகுக்க முதன்மையாக இருந்த மற்றும் ஏனைய மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷக்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய அனைவரிடமிருந்தும் பணத்தை மீளப் பெறுவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல்.

காலத்திற்கு காலம் மாறும் கொள்கைகளுக்குப் பதிலாக அனைத்துத்துறைகளுக்குமான தேசியக் கொள்கையை உருவாக்குதல்.

ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை உட்பட சட்டவிரோத மற்றும் அநீதியான முறையில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான நபர்கள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் போன்ற பிரச்சினைகளுக்கு பிரதமர் சாதகமாகப் பதிலளிப்பார் என நம்புவதுடன், இந்த நிபந்தனைகளுக்கு அமைய பிரதமர் எடுக்கும் முடிவுகளுக்கு நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் ரவிகரன் உள்ளிட்ட இருவரிடம் விசாரணை

**(விஜயரத்தினம் சரவணன்)**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனிடமும் கரைதுறைப் பற்று பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.மயூரனிடமும் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின்போது விடுதலைப் புலிகளின் சின்னங்கள் எவையும் பயன்படுத்தக்கூடாதென பொலிஸாரால் இந்த விசாரணையின்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸ் பொறுப்பதிகாரியால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்திருந்தோம். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பிலே இதன்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்தோடு இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மேற்கொள்வதற்கு பிரதமர் கூட மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அதேபோல் தாமும் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு எவ்வித இடயூறுகளையும் மேற்கொள்ளமாட்டோம் என்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார். இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை எவ்வித அசம்பாவிதங்களுமின்றி நடத்தி முடிக்க வேண்டும் எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.

அதிலும் குறிப்பாக, இந்த நினைவேந்தல் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் சின்னங்கள் அங்கே பயன்படுத்தப்படாமல் நினைவேந்தல் நிகழ்வை நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.



இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைப் பொறுத்தவரையில், கடந்த 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலரும் தனித்தனியே, ஆங்காங்கே பல இடங்களில் நினைவேந்தலை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் கலப்படம் இருக்கக்கூடாது என்ற நோக்குடன், இந்த நினைவேந்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென ஒரு நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பினர் கடந்த 2019, 2020ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறாக பல வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செயற்பாடுகள் எவ்வித அசம்பாவிதங்களின்றி இடம்பெற்றுவருவதையும், எமது தமிழ் உறவுகள் மிகவும் உருக்கமாகவும், புனிதமாகவும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொண்டுவருவதையும் நான் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு நன்கு தெளிவுபடுத்தியிருந்தேன்.

மேலும் இம்முறையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கென உருவாக்கப்பட்ட அந்த பொதுக் கட்டமைப்பினால் நினைவேந்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அந்த நினைவேந்தல் செயற்பாடுகளில் எமது பங்களிப்புகளும் இருக்கும் என்பதையும் இதன்போது தெளிவுபடுத்தியிருந்தேன் - என்றார்.

### சனத் நிஷாந்த, மிலான்...

**யோ.தர்மராஜ்**

நாட்டில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றம் மிலான் ஜெயதிலக்க ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்று (17) மாலை அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகைக்கு வருகை தந்து ஆதரவாளர்களுடன் சென்று காலி முகத்திடலில் தாக்குதல் நடத்தி வன்முறையை ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, வன்முறை சம்பவம் தொடர்பாக அடையாளம் காணப்பட்டுள்ள சனத் நிஷாந்த மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட



24 பேரை கைது செய்யுமாறு நேற்றுமுன்தினம் சட்டமா அதிபரினால் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்திலும் இந்த விடயம் தொடர்பாக பெரும்பாலான உறுப்பினர்கள் சுட்டிகாட்டியிருந்த நிலையில், நேற்று மாலை இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

### உயர் அதிகாரிகளால் மூண்ட...

ஆனால், இந்தப் பொருளாதார ஆபத்தை மனித ஆபத்தாக மாற்றுவதற்கு சிலருக்கு தேவையுள்ளது. காலிமுகடத்திடலுக்கு தாக்குதல் நடத்தவும் அதனை முக்கிய காரணமாகக்கொண்டு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் வீடுகளுக்கு தீ வைப்பதற்கும் சிலருக்கு தேவையிருந்தது.

இதன்போதே, பொருளாதார ஆபத்து, மனித ஆபத்தாக மாறும்போது, இலங்கையின் சட்டத்துறை செயற்பட முடியாது என்பதோடு, பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தடுக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்வார்கள். இதன்போதே சர்வதேச இராணுவத்தின் தலையீடு அதிகரிக்கும் சூழல் உருவாகும். ஆனால், தீ வைத்த அல்லது வீடுகளை உடைத்தவர்கள் இதன் முழு உருவத்தையும் தெரிந்துகொண்டு செயற்பட்டார்கள் என்று நான் கூறவில்லை. ஆனால், யார் யார் இதற்கு பின்னால் செயற்பட்டுள்ளனர். வெளியாட்கள் தலையிடுவதற்கான வழிகளையே உருவாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

காலிமுகத்திடலில் நிராயுதபாணியாக போராடிக்கொண்டிருந்த இளைஞர்களை தாக்கச்சென்ற, அவர்களை வழிநடத்திய அனைவரையும் கைது செய்ய வேண்டும். என்னுடைய வீட்டுக்கு தீ வைக்க முதலில் 12 பேரே வருகை தந்திருந்தனர். ஆனால், எதுவும் செய்யக்கூடாது என பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. பின்னரே அந்த 12 பேரும் மேலும் 23 பேரும் இணைந்து வீட்டு நுழைவாயிலை உடைத்துகொண்டு உள்ளே வந்தனர். என்னுடைய பிள்ளைகளின் பொருட்களைக்கூட கொள்ளையடித்துள்ளனர்.

எனவே, இங்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியது மட்டுமல்ல, இது ஒரு கொள்ளைச் சம்பவமுமாகும். சட்டம் ஒழுங்கு முற்றாக சீர்குலைந்துள்ளது. மனித உரிமை ஆணைக்குழுவிடமிருந்து எனக்கு கிடைத்த தகவலின்படி, அலரிமாளிகையிலிருந்து காலிமுகத்திடலுக்குச் செல்வதற்கு இடமளிக்க வேண்டாம் என பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதற்கமைய, தண்ணீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைத் தாக்குதலுக்கு தேசபந்து தென்னக்கோன் தயாராகியுள்ளார்.

என்ன செய்யப் போகின்றீர்கள் என பொலிஸ்மா அதிபர் வினவியுள்ளார். இதற்கு பதிலளித்துள்ள தேசபந்து தென்னக்கோன், அவர்களால் இங்கு வர முடியாது. இது ஜனாதிபதியின் உத்தரவு எனக் கூறியுள்ளார். அவ்வாறு எதுவும் செய்ய வேண்டாம். பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பேசுங்கள் என பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். இதனையடுத்து, தேசபந்து தென்னக்கோன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அமைச்சின் செயலாளரும் இதனையே கூறியுள்ளார். அதாவது, இது அண்ணா தம்பியின் பிரச்சினை. அங்கிருப்பது மஹிந்தவின் கூலியாட்கள். அவர்கள் மக்களுக்கு தாக்குதல் நடத்திவிட்டு பின்னர் சேர்ந்துகொள்வர். இறுதியில் நீங்களே ஆபத்தில் விழ வேண்டும். எனவே, எதுவும் செய்யாதிருங்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். அவ்வாறாயின், பொலிஸாரை அமைதியாக இருக்குமாறே உத்தரவிடப்பட்டுள்ளது.

இராணுவத்தை பலப்படுத்தாததும், பொலிஸாரை வலுவிழக்கச் செய்ததும், அலரிமாளிகைக்கு ஆட்களை அழைத்து வந்ததும் பொருளாதார ஆபத்தை மனித ஆபத்தாக மாற்றுவதன் ஒரு பகுதியாகும். சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து நாட்டை அராஜகமாக்கி அதனை சர்வதேசத்துக்கு காட்டுவதே இதன் நோக்கமாகும்.

எங்களுடைய வீடுகளை எரித்தும் எங்களை கொலை செய்தும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்றால் எங்களை கொலை செய்யுங்கள்.

இதேவேளை, இராணுவத்தை களமிறக்கியதற்கு கண்டனம் தெரிவித்து ட்விட்டர் பதிவிட்ட, அமெரிக்கத் தூதுவர், அமைச்சர்களின் வீடுகளை தீ வைத்து எரித்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கவுமில்லை. தொடர்புடையவர்களை கைது செய்யுமாறும் ட்விட்டரில் பதிவிடவில்லையே. தீ வைப்பு தொடர வேண்டும். அதற்கு இராணுவத்தை களமிறக்கியது அவருக்கு விருப்பமில்லை. இந்த சூழ்ச்சிக்குள் சிக்க வேண்டாம்.

துண்டு அணிந்த காகம் (கப்புட்டா) இன்றும் சபையில் பிரிவினையை ஏற்படுத்தினார். கப்புட்டா இருக்கும் வரை சூழ்ச்சிகளே முன்னெடுக்கப்படும். அலரிமாளிகைக்கு ஆட்களை அழைத்துவர திட்டமிட்டது அவரே – என்றார்.

# ரிதிதென்னையில் சிசிரிவி கெமராக்கள் பொருத்தப்பட்ட பொலிஸ் - இராணுவ கூட்டு காவலரண் திறந்துவைப்பு





(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் - ரிதிதென்ன வெலிகந்தை எல்லைப் பகுதியில் கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்ட பொலிஸ், இராணுவ கூட்டு வீதிச் சோதனை காவலரண் ஒன்று நேற்று (17) திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எல்.கே.டபிள்யூ.கமல் சில்வா பிரதம அதிதியாக கலந்துகொண்டு இதனைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தினேஸ் கருணாநாயக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எச்.சுதத் மாசிங்க, வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிலங்க பெர்னாண்டோ, நாவலடி இராணுவ அதிகாரி மேஜர் தேவகபோல், மற்றும் வாழைச்சேனை, ஏறாவூர், கல்குடா, வாகரை ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர், அல்கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எஸ்.ஹாரூன், ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் ஏ.சி.நியாஸ், வாழைச்சேனை வர்த்தக சங்கத் தலைவர் எம்.றபீக் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

வாகரை பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் மற்றும் ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் ஏ.சி.நியாஸ் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கல்குடா அல்கிம்மா நிறுவனத்தின் பெருமளவான நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ் வீதி காவலரணுக்கு கண்காணிப்பு கெமராக்கள் பொருத்துவதற்கான நிதியுதவியை ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை வர்த்தக சங்கம் வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு, வெலிக்கந்தை எல்லை பகுதியில் மக்கள் பாதுகாப்புக் கருதியும், மாவட்ட எல்லை பாதுகாப்புக் கருதியும் குறித்த இவ்வீதி காவலரண் ஊடாக செல்லும் அனைத்து வாகனங்களையும் கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

# ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பில் கைதான 55 பேருக்கும் 30ஆம் திகதிவரை விளக்கமறியல்



(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணிவந்தது தொடர்பாக சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 55 பேரையும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ரி.தியதகேஸ்வரன் நேற்று (17) உத்தரவிட்டார்.

கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்றும் சந்தேகத்தினபேரில் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 69 பேரை கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தாக்கல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவரின் வழக்குகள் நீதவான் நீதிமன்றிலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதுடன், 5 பேர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டதுடன், எழுவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். எஞ்சிய 55 பேர் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, பதுளை, திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# ஓட்டமாவடி பாத்திமா பாலிகாவில் புதிய மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு



(மீராவோடை நிருபர்)

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா தேசிய பாடசாலையில் இவ்வாண்டில் தரம் 6இல் சேர்ந்துள்ள புதிய மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு நேற்று (17) இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ.எல்.அபுல் ஹஸன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய மாணவிகளுக்கு பாடசாலை இலட்சினை பொறிக்கப்பட்ட தொப்பி அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், ஏழாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவிகளின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.யூ.எம்.இஸ்மாயில், கிழக்குப் பல்கலைக்கழக



சிரேஷ்ட விரியுரையாளர் எம்.ரீ.எம்.றிஸ்வி மஜீதி, ஆசிரிய ஆலோசகர் ஏ.எல்.சலாம், ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான ஐ.ரீ.அஸ்மி, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல்.அஸ்மி மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இம்முறை குறித்த பாடசாலையில் தரம் 6இல் இணைந்து கல்வி கற்க சுமார் 182 மாணவிகள் சேர்ந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.எல்.அபுல் ஹஸன் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உதுமாபுர தாறுல் ஹஸனாத் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களுக்கு வித்தியாரம்ப விழா



(பாலமுனை நிருபர்)

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை உதுமாபுர தாறுல் ஹஸனாத் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் வித்தியாரம்ப விழா பாடசாலையின் அதிபர் எம்.ஏ.அபாஹீல்பான் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா அனஸ் பிரதம அதிதியாகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்டீன், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் எஸ்.எம்.ஹனிபா, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.எம்.றிபாஸ்டீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பாடசாலையின் பீ.எஸ்.ஐ.இணைப்பாளர் மௌலவி என்.நசீர், ஹாஜி பவுண்டேசன் அமைப்பின் தலைவரும் சமூக சேவையாளருமான எம்.ஐ.அர்சாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.அன்சார் உட்பட பள்ளிவாசல் தலைவர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலையில் தரம் ஒன்றுக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் தரம் இரண்டு மாணவர்களினால் மாலை அணிவித்து இணிப்பு வழங்கி வரவேற்கப்பட்டதுடன், மாணவர்களின் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இறக்ககண்டியில் படகு கவிழ்ந்து 19 வயது இளைஞர் உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி பகுதியில் படகு கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (17) காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் இறக்ககண்டி வாழையூற்று பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய துஷ்யந்தன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மூன்று இளைஞர்கள் இணைந்து பாலப்பழம் ஆய்வதற்காக படகில் சென்றபோது படகு கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் மற்ற இருவர் தப்பியதாகவும் பொலிஸ் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குறித்த இளைஞனின் சடலம் தற்பொழுது நிலாவெளி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனால் உலருணவுப் பொதிகள் விநியோகம்







(மாளிகைக்காடு நிருபர்)

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட அன்றாட தொழில்கள் மூலமாக வருமானம் பெறும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல குடும்பங்களுக்கு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் Feed a Family in Sri Lanka எனும் திட்டத்தின் மூலம் உலருணவுப் பொதிகள் அவ்வமைப்பின் தலைவி சட்டத்தரணி மர்யம் நளீமுடீன் தலைமையில் மூன்றாம் கட்டமாக கோவில், விகாரை, தேவாலயம் மற்றும் மஸ்ஜித்களில் வைத்து விநியோகிக்கப்பட்டன.

இத்திட்டமானது பிரதேச செயலாளரின் ஊடாக கிராமசேவகர்கள் மற்றும் பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட விவசாயம், மீன்பிடித் தொழில், அவை சார்ந்த கூலித்தொழில்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் சுய தொழில்களில் ஈடுபடும் பல தேவையுடைய குடும்பங்களுக்கு இந்துப் பயனாளிகளுக்கு உபபிரதேச செயலக கோவிலிலும், பௌத்த குடும்பங்களுக்கு கல்முனை ஸ்ரீ சுபாத்திராமா மகா விகாரையிலும், முஸ்லிம்களுக்கு பெரியநீலாவனை புலவர்மணி சரிபுதீன் பாடசாலையிலும், கிறிஸ்தவர்களுக்கு கல்முனை திருஇருதய நாதர் ஆலயத்திலும் வைத்து விநியோகிக்கப்பட்டன.

விசேடமாக இத்திட்டமானது எமது மக்களின் அன்றாட வாழ்க்கை மட்டமானது. இயல்புநிலைக்குத் திரும்பும்வரை இன்னும் பல கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது துர்நாற்ற விவகாரம் தொடர்பில் சுகாதார தரப்பின் உயர்மட்ட கலந்துரையாடல்





(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருதில் சில நாட்களாக பிந்திய மாலைப்பொழுது முதல் அதிகாலை நேரம்வரை பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சாய்ந்தமருது ஜும்மா பெரியபள்ளிவாசல் நிர்வாகிகள், பிரதேசவாசிகள், பொது அமைப்புகள் இந்த துர்நாற்றம் தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

சாய்ந்தமருது விலங்கறுமனை அடங்கலாக பல்வேறு இடங்களில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சுகாதாரத்துறையினர் பல உண்மைகளை இதன்போது கண்டறிந்தனர். இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்களுடனான உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம்.நியாஸின் தலைமையில் வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நேற்று (17) இடம்பெற்றது.

கருத்தாடல்கள் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சி.அன்ஸார், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர், மாநகர பொறியியலாளர் எம்.ஜே.எம்.ஜௌசி, மாநகர மிருக வைத்திய அதிகாரி வட்டபொல்ல, காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லீமா பஷீர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி, கல்முனை மாநகர சபை சுகாதாரக் குழுவின் தவிசாளர் சட்டத்தரணி ரோஷன் அக்தர், மாநகர சுகாதாரப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி யூ.எல்.எம்.இசாக், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் முஹம்மட் நளீர், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம்.சம்சுதீன், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நிறைவேற்று உயர் அதிகாரிகள், மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், விலங்கறுமனை உரிமையாளர் எம்.எஸ்.எம்.அஷ்ரப், இவ்விடயம் தொடர்பில் ஆராயும் ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர் மற்றும் சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம்.நியாஸ் ஆகியோர் தனது களவிஜயத்தில் தாங்கள் அடையாளப்பபப்படுத்திய துர்நாற்றம் வரும் சந்தேக இடங்கள் தொடர்பிலும், தீர்வை பெறவேண்டிய வழிவகைகள் தொடர்பிலும், தாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் வெண்திரையின் காட்சிகளின் மூலம் சபைக்கு விளக்கமளித்தார். இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப்பெறுவது தொடர்பில் ஆழமாக கருத்துப்பரிமாற்றம் இடம்பெற்றதுடன், முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம் கிரமமாக இடம்பெற்று வருகின்றது. நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் குறைவடைந்துள்ள நிலையில், டெங்கு பரவல் அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாவட்டத்திலிருந்து கொரோனா மற்றும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுவதற்கும், விசேட விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் மேற்கொண்டுள்ளார்.

அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைய பொது இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வாராந்த சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் மாவட்ட செயலக உத்தியோகத்தரினால் சிரமதான நடவடிக்கை மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று (17) இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் இச்சிரமதான நடவடிக்கையில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு மாவட்ட செயலக வளாகத்தினை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேலும், கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றி நடப்பதுடன், டெங்கு நுளம்பு பரவலிலிருந்து அவதானமாக இருக்குமாறும் வலியுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் வீசும் துர்வாடைக்கு விலங்கறுமனையே காரணமென நிரூபிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க பின்நிற்க மாட்டேன்

## கல்முனை மாநகர முதல்வர் றகீப் உறுதி

(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் சகிக்க முடியாதளவு வீசும் துர்வாடையானது விலங்கறுமனையிலிருந்து வெளிவருவதற்கான காரணிகள் தென்படவில்லையென களப்பரிசோதனை மேற்கொண்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். எவ்வாறாயினும் இத்துர்வாடைக்கு அந்த விலங்கறுமனைதான் காரணம் என்று நிரூபிக்கப்பட்டால், அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஒருபோதும் பின்நிற்க மாட்டேன் - என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது;

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக இரவு வேளைகளில் மிக மோசமான துர்வாடை வீசி வருவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்து, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் நானும் சந்தித்து, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்திருந்தோம். இதன்போது முதலில் துர்நாற்றம் எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொண்டு, தனக்கு அறியத்தருமாறும் அதன் பிரகாரம் உரிய நடவடிக்கைகளை தாம் முன்னெடுப்பதாகவும் அவரிடம் வலியுறுத்தியிருந்தேன்.

இந்நிலையில், சுகாதாரத்துறையினர் சாய்ந்தமருது பொலிவேரியன் வீட்டுத்திட்டத் திற்கப்பால் அமைந்துள்ள விலங்கறுமனையை பகல் வேளைகளிலும் இரவு வேளைகளிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் திடீர் விஜயம் மேற்கொண்டு, பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது குறித்த துர்வாடை வீசுவதற்கான வாய்ப்புகள், காரணங்கள் எவையும் விலங்கறுமனையிலோ அதன் சுற்றுச்சூழலிலோ கண்டறியப்படவில்லை என்பதாக குறித்த சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவ்வாறாயின் இத்துர்நாற்றம் எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது கல்முனையை நோக்கி செல்லும் வண்ட் வீதி என்றழைக்கப்படுகின்ற குளக்கரை பாதையோரமாக நீர்நிலைகளில் மாட்டுக்கழிவுகளும் கோழிக்கழிவுகளும் இதர கழிவுகளும் மூடை மூடையாக போடப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது.



குறிப்பாக, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டம் என்பவற்றை அண்மித்துள்ள வண்ட் வீதியின் ஒரு பகுதியிலுள்ள நீர்நிலையினுள் நூற்றுக்கணக்கான மூடைகளில் ஆடு, மாடு மற்றும் கோழிக்கழிவுகள் காணப்பட்டிருந்தன. இரவுநேரங்களில் எழுகின்ற துர்வாடைக்கு இவைதான் காரணமாக இருக்கலாம் என்று சுகாதாரத்துறையினரால் ஊகிக்கப்படுகிறது. இதையடுத்து, மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் பிரிவினரால் கனரக வாகனங்களின் உதவியுடன் முடியுமானளவு கழிவுகள் மீட்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளன. இங்கு இன்னும் ஆழமான பகுதியில் இவ்வாறான கழிவுகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இவற்றையும் ஏனைய குளக்கரைப் பகுதிகளிலும் இவ்வாறான கழிவுகள் இருக்குமாயின் அவற்றையும் அகற்றுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

விடயம் இவ்வாறிருக்க, சிலர் முகநூல்களில் இத்துர்வாடையானது மேற்படி விலங்கறுமனையில் இருந்துதான் வெளிப்படுகிறது எனவும் இதனை மாநகர சபை கண்டுகொள்ளவில்லை எனவும் மாநகர முதல்வராகிய நான் விலங்கறுமனை உரிமையாளரிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனமாக இருப்பதாகவும் அபாண்டங்களை சுமத்தியுள்ளனர்.

இத்துர்வாடை விலங்கறுமனையிலிருந்து வெளிவரவில்லை என சுகாதாரத்துறை அதிகாரிகள் களப்பரிசோதனை செய்து, உறுதிப்படுத்தியிருக்கின்றபோது காழ்ப்புணர்ச்சி காரணமாக சிலர் என் மீது வேண்டுமென்றே சேறு பூசுவதற்காக வதந்திகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர். சரி, நாற்றம் இங்கிருந்துதான் வருகிறதோ இல்லையோ இவர்கள் கூறுவது போன்று விலங்கறுமனையை பூட்டிவிடுவது பெரிய காரியமல்ல. ஆனால், மாட்டிறைச்சியை எமது மக்கள் நுகர முடியாத துர்ப்பாக்கியம் ஏற்படும் என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

சாய்ந்தமருது கடற்கரைப் பிரதேசத்தில் ஏற்கனவே அமையப்பெற்றிருந்த விலங்கறுமனை குடியிருப்புப் பகுதியை அண்மித்திருந்தமையினால், பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம் காரணமாகவே அது அங்கிருந்து அகற்றப்பட்டது. பின்னர் விலங்கறுமனையொன்றின் அவசியம் கருதி ஊரிலிருந்து வெகுதொலைவில் கரைவாகு வயல் பகுதியொன்றில் அதனை அமைப்பதற்கு கல்முனை மாநகர சபையினால் 2009/2010 காலப்பகுதியில் தனியார் நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அது சுமார் 13 வருடங்களாக அவ்விடத்தில் இயங்கி வருகிறது. ஆனால், அண்மைக்காலமாக மக்களை விசனப்படுத்துமளவுக்கு சாய்ந்தமருது பிரதேசமெங்கும் வீசி வருகின்ற பெரும் துர்நாற்றம் முன்னொருபோதும் ஏற்பட்டதாக அறியக்கிடைக்கவில்லை.

குறித்த விலங்கறுமனையிலிருந்துதான் அந்த நாற்றம் வருகிறது என்று நிரூபிக்கப்பட்டால், அந்த விலங்கறுமனை தொடர்பில் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க தயாராகவே இருக்கிறேன். மேலும், பொது மக்கள் கோரிக்கை விடுத்தால் இதனைப் பூட்டி விடுவதற்கும் எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும். எதைச் செய்வதானாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். குறித்த நீர்நிலைகளில் இவ்வாறான கழிவுகளைக் கொட்டுகின்ற ஈனப்பிறவிகள் கண்டறியப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும். அவர்களை அடையாளப் படுத்துவதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும் என்று நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். சில தினங்களுக்கு முன்னர் இக்கழிவுகள் அகற்றப்பட்ட நீர்நிலைப் பகுதியில் மீண்டும் கழிவுப்பொதிகள் போடப்பட்டிருக்கின்றன. அவ்வாறாயின் இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது?

ஆளணி மற்றும் வாகனங்கள் உள்ளிட்ட வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் சேகரிக்கின்ற குப்பைகளை டம்மிங் செய்வதற்கான இடமொன்று இல்லாத நிலையிலும் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள எரிபொருட்களினதும் வாகன உதிரிப்பாகங்களினதும் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு, நிதிபற்றாக்குறை என்பவற்றுக்கு மத்தியிலேயே திண்மக்கழிவகற்றல் சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சட்டவிரோதமாக நீர்நிலைகளில் மூடை மூடையாக கொட்டப்படுகின்ற கழிவுகளை நாளாந்தம் அகற்றுவதென்பது சாத்தியமற்ற விடயம் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் காரணங்களுக்காக எம்மீது சேறு பூசுவதை விடுத்து, நேர்மையுடன் அறிவுபூர்வமாகவும் யதார்த்தபூர்வமாகவும் சிந்தித்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என அன்பாய் அழைக்கின்றேன் - என்றார்.

# கல்முனையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் நான்காம் நாள் அனுஷ்டிப்பை மேற்கொள்ளும் முகமாக கல்முனை நகரில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் (16) மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை மாநகர சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், க.கோடீஸ்வரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் உள்ளிட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உறவுகள் துன்ப, ரணங்களோடு உண்ண உணவின்றி ஒருவேளை உணவாக கஞ்சியை அருந்தியமையை நினைவுகூரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.



அத்துடன், இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த அனைத்து உறவுகளுக்குமாக ஈகைச் சுடரேற்றப்பட்டு, அகவணக்கமும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன விடுதலையை வேண்டி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான பேரணி திருமலையில்








(திருமலை நிருபர்)

இன விடுதலையை வேண்டி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான மக்கள் பேரணி ஒன்று கடந்த 15ஆம் திகதி பொத்துவிலில் ஆரம்பமாகி நேற்று முன்தினம் (16) திருகோணமலையை வந்தடைந்தது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் ஏற்பாடு செய்த குறித்த பேரணி, திருகோணமலை சிவன் ஆலயத்தை நேற்று முன்தினம் (16) பிற்பகல் வந்தடைந்தது.

இவ்வாறு வருகைதந்த வலிந்து காணாமலாக்கப் பட்டோர் உறவினர்கள் திருகோணமலை பிரதான கடற்கரைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சுற்றுவட்டத்திற்கு முன்னால் படுகொலை செய்யப்பட்ட ஆறு பல்கலைக்கழக மாணவர்களை நினைவுகூரும் வகையில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலியும் செலுத்தினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அருட்பணி கந்தையா ஜெகதாஸ், 13 வருடங்களுக்குப் பின்னர் அரச போரினால் மரணித்தவர்களை நினைவுகூர அவர்களுக்கு உரிமை உண்டு. அதனைத் தடுக்க மாட்டோம் என அறிவித்தபோதிலும் அரச புலனாய்வுத் துறையினரின் கெடுபிடிக்கு மத்தியிலேயே இந்த நினைவுகூரலை அனுஷ்டிக்க வேண்டியுள்ளது என கவலை தெரிவித்தார்.

மேலும் திருகோணமலை நகரை வந்திருந்த குறித்த மக்கள் பேரணியை சுற்றி ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் புலனாய்வுத்துறையினர் புகைப்படம் எடுத்தவண்ணம் உள்ளார்கள். தற்போது சுமுகமான சூழ்நிலையால் புகைப்படங்களை எடுத்து பின்னர் புகைப்படத்தை வைத்துக்கொண்டு எம்மவர்களை ஒடுக்குவதை நிறுத்தவேண்டும் எனவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மக்கள் பேரணியானது பொத்துவிலிலிருந்து ஆரம்பமாகி அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பின் ஊடாக வாகரை, மூதூர் பிரதேசத்திலிருந்து திருகோணமலை நகரை வந்தடைந்தது.

குறித்த பேரணி திருகோணமலையிலிருந்து ஆரம்பமாகி நிலாவெளி, குச்சவெளி, புல்மோட்டை ஊடாக தென்னமரவாடியை சென்றடைந்து, அங்கிருந்து வவுனியா ஊடாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளதுடன், "முள்ளிவாய்க்கால் வலிசுமந்த கதை பகிர்வும்" எனும் தொனிப்பொருளில் பொத்துவிலிலிருந்து ஆரம்பமான மக்கள் பேரணி இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மக்கள் பட்ட அவலநிலையை நினைவுகூரும் நோக்கில் பயணத்தை ஆரம்பித்தது.

மக்கள் பேரணியில் மதகுருமார்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் இரண்டு கடைகள் கொள்ளை

## 57 ஆயிரம் பணமும் பொருட்களும் திருட்டு



(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கடைகள் யாவும் சாய்ந்தமருது ஜும்மாப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான கடைத்தொகுதியில் இரண்டாம் இலக்கக்கடை மற்றும் 12ஆம் இலக்கக் கடைகள் உடைக்கப்பட்டு, ரொக்கப்பணமும் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் பொலிஸாரிடம் தெரித்துள்ளனர்.

கடை உரிமையாளர் பொலிஸாரிடம் கடைக்குள் இருந்த 57ஆயிரம் பணமும் பல பொருட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். மற்றைய தேநீர்க் கடை உரிமையாளர் பொலிஸாரின் விசாரணையின்போது, கடை உடைக்கப்பட்டுள்ளதாகவும் பொருட்கள் ஒன்றும் களவாடப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கொள்ளை தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுதீன் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அம்பாறை புலனாய்வுத்துறை பொலிஸார் மோப்பநாயின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், அப்பகுதியிலுள்ள சிசிடிவி கெமராக்களின் பதிவுகளைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# கந்தளாயில் வன்முறைகளில் ஈடுபட்டதாக கைதான 14 சந்தேகநபர்களுக்கு பிணை!

(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை கந்தளாய் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டதாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட 14 பேருக்கு நேற்று முன்தினம் (16) கந்தளாய் பதில் நீதவான் எம்.எச்.எம்.நிறோஷினால் பிணை வழங்கப்பட்டது.

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வீடு சேதமாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரினால் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (16) ஆஜர்படுத்தியபோதே பிணை வழங்கி உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கக் கோரி, கந்தளாய் சட்டத்தரணிகள் சங்கம் உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நாவிதன்வெளியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் அனுஷ்டிப்பு

(அம்பாறை நிருபர்)

எமது போராட்டமானது ஏனைய இனத்திற்கு எதிரானது அல்ல எனவும் சகல மக்களும் ஒற்றுமையுடன் எதிர்காலத்தில் பயணிக்க முன்வரவேண்டும் எனவும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் 5ஆம் நாளை நினைவுகூரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூறும் நிகழ்வொன்று நாவிதன்வெளி பகுதியில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்றவேளை மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது,

தமிழினம் பல அடக்குமுறைகளுக்கு உட்பட்டு பல இன்னல்களை சந்தித்ததோர் இனமாகும். அத்துடன், ஜனநாயக ரீதியாக பல போராட்டத்தை நாம் முன்னெடுத்தபோதிலும் தீர்வு கிடைக்காத பட்சத்தில் ஆயுத ரிதியிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆயுத ரீதியான போராட்டமும் எந்த இனத்திற்கும் எதிராக முன்னெடுக்கவில்லை. எமது இனத்தை பாதுகாப்பதற்காகவே ஆயுதப் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது. எமது போராட்டமானது ஏனைய இனத்திற்கு எதிரானது அல்ல. சகல மக்களும் ஒற்றுமையுடன் எதிர்காலத்தில் பயணிக்க முன்வர வேண்டும் என்றார்.




இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கவிந்திரன் கோடீஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான பொன் செல்வநாயகம், சிவலிங்கம், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர்களான சி.குணரெத்ணம், மு.நிரோஜன், யோ.தர்சன், நா.தர்சினி, சமூக சேவகர் சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன், மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சியின் மகளிர் அணி தலைவி என்.தேவமணி, ஆலையடிவேம்பு தமிழரசுக்கட்சியின் தலைவர் ஜெகநாதன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு வீதியால் சென்ற மக்களுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சித்திரப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிப்பு

(பொலிவேரியன் நிருபர்)

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பெறுமதியான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கின்ற வைபவம் நேற்று (17) பாடசாலையில் காலை ஆராதனையின்போது இடம்பெற்றது.

அயாஹ் எவ்.எம் மற்றும் அயாஹ் தொலைக்காட்சியின் 2ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, சித்திரக் கலையை மாணவர்களிடையே மேலும் வளர்க்கும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்ட இப்போட்டியில், இப்பாடசாலையில் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவ, மாணவிகளில் 242 மாணவர்கள் பங்குபற்றி, அதில் சிறந்த முறையில் தங்களது திறமைகளை வெளிப்படுத்திய 25 மாணவ, மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

முதல் 5 மாணவ, மாணவிகளுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு, ஏனைய 20 பேருக்கு ஆறுதல் பரிசாக சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது சிங்கர் சோறூம் நிறுவனத்தினர் பூரண அனுசரணை வழங்கியிருந்ததோடு, பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார், உதவி அதிபர் எம்.எச்.நுஸ்ரத் பேகம், அயாஹ் எவ்.எம். மற்றும் அயாஹ் தொலைக்காட்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஸ்மத் ஸஹ்மி மஜீட், மற்றும் உறுப்பினர்கள், சிங்கர் சோறூம் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.எச்.ஜிப்ரி மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



**அரசியல் கட்சிகளை உடைத்து எம்.பிக்களை உள்வாங்க முயலவேண்டாம் என மனோ, சுமந்திரன், ஹக்கீம் கூட்டாக ரணிலிடம் வலியுறுத்தினாங்க எலுவா? அவரு நரித்தந்திரத்தால கட்சிகள உடைப்பார் எண்டது அவரோட பழகின இந்த மூன்றுபேருக்கும் நல்லா தெரிஞ்சிதான் இத சொல்லி இருங்காங்க ஆன அந்த நரி சும்மா இருக்காது ஆப்படிச்சே தீரும். பாருங்கவன் கொஞ்ச நாளில் புதினத்துகள.**

# சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு ஆறுமாத சம்பளத்தை வழங்கினார் விஜேதாச

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி விஜேதாச ராஜபக்‌ஷ, தனது ஆறு மாதகால சம்பளக் கொடுப்பனவை (சகல மேலதிக கொடுப்பனவுகளுடன்) கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளார்.

இம்மாதத்திலிருந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரையான தனக்கான கொடுப்பனவுகளையே இவ்வாறு மருத்துவமனைக்கு பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளார்.

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறும் நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக தனது ஆறுமாத சம்பளத்தை, குறித்த வைத்தியசாலையின் வங்கிக் கணக்குக்கு மாற்றுமாறு விஜேதாச ராஜபக்‌ஷ எம்.பி. நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கடிதமொன்றினூடாக அறிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை கவனத்தில் கொண்டு இந்த நன்கொடையை வழங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நன்கொடை தொடர்பில் விஜேதாச ராஜபக்‌ஷ எம்.பி., கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் பணிப்பாளர் வைத்தியர் ஜீ விசேடசூரியவுக்கும் தெரியப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## அத்தியாவசிய சேவைகளின்போது அங்கவீனமுற்றோருக்கு முன்னுரிமை

எரிபொருள், உணவு, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் விசேட தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு அனைத்து பொது மற்றும் தனியார் நிறுவனங்களிடமும் அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக விசேட தேவையுடையவர்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதாக வெளியான தகவலையடுத்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

# மஹிந்த உள்ளிட்ட குழுவினரை கைது செய்யக்கோரி பொலிஸ் தலைமையகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்






(படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)




காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவங்களுக்கு பிரதான காரணமான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ உள்ளிட்ட குழுவினரை ஒரு வாரத்துக்குள் கைதுசெய்ய பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, சமூகவாத இளைஞர் சங்கம் பொலிஸ் மா அதிபரிடம் கடிதமொன்றை ஒப்படைப்பதற்காக வருகைதந்ததையடுத்து நேற்று முன்தினம் (16) பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக அமைதியின்மை ஏற்பட்டது.



பொலிஸ் மா அதிபரை சந்திப்பதற்காக, சிலர் பொலிஸ் தலைமையகத்தின் பிரதான நுழைவாயிலை திறந்து உள்நுழைய முயற்சித்தபோதே இவ்வாறு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களால் எடுத்துவரப்பட்ட கடிதம் பொலிஸ் மா அதிபருக்கு ஒப்படைக்க முடியாமல் போனதால், அதற்காக வருகை தந்திருந்த பிரதிநிதிகள் இருவரிடமும் ஒப்படைக்கப்படவில்லை. அவர்கள் மீது நம்பிக்கை இல்லையென தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்களினால் குறித்த கடிதம் பொலிஸ் தலைமையகத்துக்கு முன்னால் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் கோட்டை பிரதான புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமானதுடன், அந்தப் போராட்டம் பேரணியாக பொலிஸ் தலைமையகம் வரை பயணித்தது.

போராட்டத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டு ஏழு நாட்கள் நிறைவடைந்துவிட்டன. அவர்களின் செயற்பாடுகளை பொலிஸ் மா அதிபர் பார்த்துக்கொண்டே இருந்தார். அரசாங்கமும் பொலிஸாரும் குண்டர்களுக்கு பாதுகாப்பு வழங்கியபோது போராட்டத்தை பாதுகாத்துக்கொள்ள மக்களே முன்னிருந்தார்கள். போராடிய பொதுமக்களை சிறையிலடைத்தார்கள். மாளிகையிலிருந்து ஆணைபிறப்பிக்கப்பட்டது. அதன் விபரீதத்தை எமது மக்களே அனுபவித்தார்கள். பாதுகாப்பு வழங்குவதற்கு மக்களே முன்னிருந்தார்கள் என கோஷங்களை எழுப்பி அவர்கள் பொலிஸ் தலைமையகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பேரணியின் காரணமாக பொலிஸ் தலைமையகத்துக்கு அருகில் பெருமளவு பாதுகாப்புப் படையினரும் குவிக்கப்பட்டிருந்தார்கள். சிலர் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்துவிட்டு அவ்விடத்திலிருந்து வெளியேறியிருந்தனர்.

# அனைத்து மக்களுக்கும் கட்சி பேதமின்றி பிரதமர் ரணில் சேவையாற்றுவார்!

## விஜயகலா மகேஸ்வரன் நம்க்கை

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த வாக்களிக்காத மக்கள் அனைவருக்கும் நாட்டின் பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்க சிறந்த சேவை புரிவார் என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வாரம் புதிதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்றமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது நாடுபூராகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த வாக்களிக்காத மூவின மக்களுக்கும் தற்போது நாட்டின் பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவியினை ஏற்றுள்ளார். கிடைக்கப்பெற்றுள்ள பிரதமர்



பதவியின் மூலம் வாக்களித்த மக்கள் வாக்களிக்காத மக்கள் என்ற பிரிவினை காட்டாது அனைத்து மக்களுக்கும் அதாவது மூவின மக்களுக்கும் இன, மத பேதமின்றி அனைவருக்கும் சமமாக நாட்டிற்கு சேவையை புரிவார் எனவும் பொதுமக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# அரச நிர்வாகத்தில் அரசியல் செயற்பாட்டாளர்கள் தலையிடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## இலங்கை நிர்வாக சேவை சங்கம் சுட்டிக்காட்டு




ஜனாதிபதி, பிரதமர், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர், அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்கள பிரதானி ஆகியோரினால் மாத்திரமே, நிரந்தரமான நிறைவேற்று துறையான அரச அதிகாரிகளை அழைக்கவோ அல்லது கட்டளை பிறப்பிக்கவோ முடியும்.

இந்த சட்ட விதிமுறைகளுக்கு அப்பால் அரச அதிகாரிகளுக்கு பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் அல்லது யோசனைகளுக்கு அரச அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துள்ள இலங்கை நிர்வாக சேவை சங்கம், இது குறித்து நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நான்கு குழுக்களை நியமிப்பது என்ற தலைப்பில் பிரதமரின் செயலாளருக்கு கடிதமொன்றை அந்தச் சங்கம் அனுப்பி வைத்துள்ளது.

அரசியல் கட்சி செயற்பாட்டாளர்கள் அவர்களின் அரசியல் கட்சிகளை மேம்படுத்துவதற்காக, அரச சொத்துகளை பயன்படுத்தி, அரச நிர்வாகத்தினூடாக, சிவில் நிர்வாகத்தில் தலையிடுவதற்கு இருக்கும் சகல வாய்ப்புகளையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்றும் இவ்வாறான தெரிவுகளினூடாக எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதே நாடு தற்போது சந்தித்துள்ள நிலைமைக்கு பிரதான காரணமாகும் என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டில் தற்போது ஏற்பட்டு நெருக்கடி நிலைமையின் மத்தியில் அத்தியாவசிய சேவையை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் அல்லாத அரசில் செயற்பாட்டாளர்களின் பங்கேற்புடனான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. அவ்வாறான குழுவொன்றை பிரதமர் நியமித்திருப்பார் என்று நம்பமுடியவில்லை. ஆகவே, அதன் உண்மை தன்மை குறித்து ஊடக அறிக்கையொன்றை வெளியிட வேண்டும். அரச நிர்வாகம் அரசியல் மயமாக்கலிலிருந்து விடுவித்த, சரியான முறையில் மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் தமது முழு ஒத்துழைப்பை வழங்குமென்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மே 16,17,18...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், 16ஆம் திகதி மாலை நேரம் விடுதலைப்புலிகளின் காவல்நிலைகள் என்று எதுவும் இருக்கவில்லை. அவர்கள் சண்டைகளைத் தவிர்த்தார்கள். ஓரிரண்டு இடங்களில் இரு பகுதியினரும் சண்டையிட்டாலும், விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் பெரும்பாலும் நின்றுபோயிருந்தன. ஆனாலும், அரசப் படைகள் தொடர்ந்து விடுதலைப்புலிகளைத் தாக்குவதாக அறிவித்தபடி, மக்களையே தாக்கிக்கொண்டிருந்தன. இனி எதுவும் இல்லை என்ற கையறுநிலை ஏற்பட்டுவிட்டது.

அன்றிரவு முல்லைத்தீவை நோக்கி வட்டுவாகல் பாலத்தின் ஊடாக மக்கள் செல்லத் தொடங்கினர். ஆனாலும், இரவு நேரம் என்பதால் பாலத்தைத் தாண்டி உள்ளே செல்லும்போது, மக்களை விடுதலைப் புலிகளாகக் கருதி இராணுவம் தாக்கலாம் என அஞ்சி அங்கேயே விடியும்வரை நீண்ட வரிசையில் காத்திருந்தார்கள். ஆனால், காத்திருந்த அந்த இடத்திலேயே பெரும் சேதத்தை விளைவிக்கக்கூடிய கொத்துக்குண்டு, இரசாயனக் குண்டுகளைப் போட்டு சிங்கள இராணுவம் தாக்கியது. அங்கு எந்தப் பாதுகாப்பு அரணும் இல்லாமல் வீதியில் இருந்த மக்கள் பல நூறு பேர் கொல்லப்பட்டும், காயமடைந்தும் போனார்கள். ஆனாலும், போக்கிடம் வேறொன்றும் தெரியாமல் மக்கள் மீண்டும் அங்கேயே காத்திருந்தனர்.

அதிகாலை 3 மணி முதல் 4 மணிவரை இருக்கும். காட்டுக்குள்ளிருந்து திடீரென வெளிவந்த இராணுவம், வீதியில் அமர்ந்திருந்த மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியது. இருப்பது மக்கள் எனத் தெரிந்தும் துப்பாக்கியால் சுட்டதில் முன்வரிசையில் இருந்தவர்கள் பலர் உயிரிழந்தார்கள். அதன் பின் ஒற்றை வரிசையில் வருமாறு சிங்கள மொழியில் கட்டளையிட, துப்பாக்கிச் சூட்டினால் சிதறி ஓடிய மக்கள் ஒற்றை வரிசையில் வட்டுவாகல் பாலத்தை நோக்கிக் கொண்டுசெல்லப்பட்டனர். முன்வரிசையில் இறந்தவர்களின் சடலங்களைக் காலால் நகர்த்திவிட்டு இறந்தவர்களின் உறவுகளே முன்னோக்கிச் சென்ற கொடுமை, தமிழின வரலாற்றில் நடக்காத ஒன்று. ஆனாலும் அன்று நடந்தது!

அங்கிருந்து முல்லைத்தீவுக்குள் உள்நுழைய அனுமதிக்கப்படவில்லை. அதனால் வட்டுவாகல் பாலத்தில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தார்கள். அதிகாலை 5 மணியிருக்கும். முல்லைத்தீவு படைமுகாமிலிருந்து ஆட்லறி எறிகணைகள் வீசப்பட்டன. வழமையைவிட அதிகமாக தாக்குதல் நடத்தப்பட்டது. அதேநேரம் விடுதலைப்புலிகளும் சண்டையிடுவது புரிகிறது. நந்திக்கடல் பகுதி மற்றும் முள்ளிவாய்க்கால் - புதுக்குடியிருப்பு வீதி போன்றவற்றில்தான் சண்டை நடப்பதற்கான அறிகுறிகளை மக்கள் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆனாலும், அதற்குள் என்ன நடக்கிறது என்பதை வட்டுவாகலில் இருந்த மக்களால் உணரமுடியவில்லை. அந்த வேளையில், திடீரென வட்டுவாகல் பாலத்தை நோக்கி முள்ளிவாய்க்கால் பக்கத்திலிருந்து சிங்களப்படையினர் துப்பாக்கியால் சுட்டார்கள். அதிலும் பலர் காயமடைந்து விழுந்தார்கள். அனைவரும் நிலத்தில் அமர்ந்திருந்ததால் பெரும்பாலான காயங்கள் கழுத்தில் அல்லது தலையில் ஏற்பட்டன. சிலருக்கு படுகாயங்கள் ஏற்பட்டபோதும், அவர்களை மருத்துவத்துக்காக முன்னால் கொண்டு செல்ல இராணுவம் அனுமதிக்கவில்லை. காயமடைந்தவர்களுக்கு கட்டுவதற்கு எதுவுமற்ற நிலையில் இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. தலையில் பலத்த காயமடைந்த 25 வயது மதிக்கக் கூடிய இளைஞன் தன் தாயின் முன்னே இறந்துபோனான். அவனைத் தூக்கிக்கொண்டு இராணுவத்திடம் அவனைக் காப்பாற்றும்படி கெஞ்சினார் அந்தத் தாய். ஆனால், இராணுவமோ அதற்கு அனுமதி தரவில்லை.

காலை 8 மணியளவில் திடீரென அரசப் படைகள் மக்களை ஒற்றை வரிசையில் உள்ளே வருமாறு பணித்தன. உள்ளே நுழைந்த மக்கள், மிக நீண்ட வரிசையில் ஒரு வயல்வெளிக்குள் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே கம்பிகளால் சுற்றி அடைக்கப்பட்டிருந்த பெருவெளிக்குள் அனைவரும் அடைக்கப்பட்டனர். கம்பி ஓரங்களில் காவலுக்கு நின்ற இராணுவச் சிப்பாய்கள் வந்துகொண்டிருந்த மக்கள் மீது தடிகளாலும், துப்பாக்கிப் பிடிகளாலும் அடித்துத் துன்புறுத்துவது ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, கம்பிக் கூட்டுக்குள் கொண்டுசெல்லப்பட்ட மக்கள் பெரும் துயரத்தை சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

பல நாட்கள் உணவில்லாது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வந்திருந்த மக்களுக்கு இங்கும் அதே நிலை நீடித்தது. முள்ளிவாய்க்கால் களத்தில் நீரை அருந்தியாவது பசி போக்கிய மக்கள் இங்கே நீர்கூட இல்லாது தவித்தார்கள்.

உண்மையில் மறக்க முடியாத கொடுமை. நிலத்தில் சிந்திக்கிடந்த கழிவுநீரில் ஒரு புறம் நாய் நீரைக் குடித்துக்கொண்டிருக்க, சேறாகக் கிடந்த அந்தத் நீரைத் துணிபோட்டு வடித்தெடுத்து எம் மக்கள் அருந்திய கொடுமையும், மே 18இல்தான் நடந்தது. குழந்தைகள் தாகத்தாலும், பசியாலும் வாடினார்கள். இராணுவம் உணவுப்பொதிகளை வழங்கினாலும் அதை எல்லோரும் பெறக்கூடியதாக இல்லை. நீரும் சரியாக வழங்கப்படவில்லை. விலங்குகளுக்குத் தூக்கி எறிவதைப் போல் அன்று உணவுப்பொதிகளைத் தூக்கி எறிந்துவிட்டு அதைப் பிரித்து உண்ணத் தொடங்கிய பலரை, அந்த இடத்திலேயே அடித்துத் துன்புறுத்தி உணவைப் பறித்தெறிந்த கொடுமையும் நடந்தது.

முள்ளிவாய்க்காலில் இருந்து மக்களோடு மக்களாக இராணுவத்திடம் சரணடைந்த போராளிகள் பலர், இந்தப் பிரதேசத்தில் நின்றிருந்தார்கள். ஆனாலும், அவர்கள் அந்தப் பிரதேசத்துக்குள்ளேயே காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்கள் இன்று உயிருடன் உள்ளார்களா, இல்லையா என்பது தெரியாத நிலையிலும், அவர்களைத் தனித்துவமாக மக்களை விட்டு பிரித்தெடுத்துக் கொண்டு சென்றதை கண்கூடாகக் கண்ட சாட்சிகள் பலர் உள்ளனர். பெற்றவர்களால், வாழ்க்கைத் துணைவர்களால் இராணுவத்திடம் கையளித்ததும் இந்த இடத்தில்தான்! ஆனாலும், இதுவரை அவர்களுக்கு என்ன ஆனது என்பது யாரும் அறியாத ஒன்றாகவே இருக்கிறது.

மே 18 அன்றைய முள்ளிவாய்க்காலும் என்றும் அழியாத ரணமாகி, ஈழத்தமிழ் மக்களின் மனங்களில் கிடக்கின்றது!

# உலக செய்திகள்

# பிரான்ஸின் புதிய பிரதமராக எலிசபெத் போர்ன் நியமனம்



பிரான்ஸின் புதிய பிரதமராக எலிசபெத் போர்ன் (வயது 61) நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் 2ஆவது பெண் பிரதமர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரொன் கடந்த மாதம் 2ஆவது முறையாகவும் தெரிவுசெய்யப்பட்டார். இதையடுத்து, அப்போது பிரதமராக இருந்த ஜீன் காஸ்டெக்ஸ் இராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, ஜீன் காஸ்டெக்ஸ் திங்கட்கிழமை தமது பதவியை இராஜினாமா செய்தார். அவருக்குப் பதிலாக புதிய பிரதமராக எலிசபெத் போர்னை (Elisabeth Borne) ஜனாதிபதி மெக்ரொன் நியமித்துள்ளார்.

ஜனாதிபதி மெக்ரொனும், பிரதமர் எலிசபெத்தும் இணைந்து முழுமையான அமைச்சரவையை எதிர்வரும் நாட்களில் அமைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முந்தைய அரசில் 2020ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த எலிசபெத் அமுல்படுத்திய சில சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு தொழிலாளர்கள் மற்றும் இடதுசாரிகளிடமிருந்து விமர்சனங்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸில் 75ஆவது கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழா ஆரம்பம்



பிரான்ஸில் 75ஆவது கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழா நேற்று ஆரம்பமானது.

எதிர்வரும் 28ஆம் திகதிவரை நடைபெறும் இவ்விழாவில் மாதவன் நடிப்பில் உருவான 'Rocketry' உள்ளிட்ட திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன. இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் தலைமையிலான 11 பேர் கொண்ட குழு கேன்ஸ் திரைப்பட விழாவில் பங்கேற்கவுள்ளனர்.

இந்திய மத்திய அமைச்சர் அனுராக் தாகூர் தலைமையில் இசைப் புயல் ஏ.ஆர்.ரகுமான், நடிகர் மாதவன், நடிகைகளான நயன்தாரா, பூஜா ஹெக்டே, தமன்னா உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

## 70 ஆண்டு கொண்டாட்டம்: பிரிட்டன் ராணி பங்கேற்பு



பிரித்தானிய மகா ராணி இரண்டாம் எலிசபெத், தன் 70 ஆண்டு கால ஆட்சியை கொண்டாடும் நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளார்.

பிரிட்டனின் ராணி இரண்டாம் எலிசபெத் (வயது 96), கடந்த 1952இல் முடிசூட்டப்பட்டார். அவரது 70 ஆண்டு ஆட்சிக் காலத்தை 'பிளாட்டினம் ஜூப்லி' என ஓராண்டுக்கு கொண்டாடப்பட இருக்கிறது.

இதற்காக அடுத்த மாதம் லண்டனில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. வயோதிபம் காரணமாக எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்காத ராணி, அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பிளாட்டினம் ஜூப்லி நிகழ்ச்சிகளில் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நேட்டோ அமைப்பில் இணைகிறது சுவீடன்



அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் இணையவுள்ளதாக பின்லாந்து அறிவித்துள்ள நிலையில், சுவீடனும் நேட்டோவில் இணைவதாக அந்நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ரஷ்யாவின் அண்டை நாடுகளான சுவீடனும் பின்லாந்தும் நேட்டோ அமைப்பில் சேர்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

நேட்டோ அமைப்பில் இணைவது தொடர்பாக, சுவீடன் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

**ரஷ்யா கடும் எச்சரிக்கை**

உக்ரைனைப்போல் பின்லாந்தும், சுவீடனும் நேட்டோவில் சேர விருப்பம் தெரிவித்துள்ளதற்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதன் துணை வெளியுறவுச் செயலாளர் செர்ஜி ரியாப்கோப் தெரிவிக்கையில், ''இது மற்றொரு மிகப்பெரிய தவறாகும். இது இராணுவ பதற்றத்தை மேலும் அதிகரிக்கும்'' என எச்சரித்துள்ளார்.

## இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் பலஸ்தீனர்கள் இடையே மோதல்

**100இற்கும் மேற்பட்டோர் காயம்**



இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் மற்றும் பலஸ்தீனியர்கள் இடையே இடம்பெற்ற மோதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பலஸ்தீனத்தின் மேற்குகரை மற்றும் காஸா முனை பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதற்கு இஸ்ரேல் தரப்பிலும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த மாதம் 22ஆம் திகதி இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த லாவிட் ஷெரீப் என்ற 21 வயதான பலஸ்தீன இளைஞர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இதனையடுத்து, உயிரிழந்த ஷெரீப்பின் உடல் அல் - அக்ஸா பள்ளிவாசலில் வைக்கப்பட்டு பின்னர் ஜெருசலேம் பழைய நகர் பகுதியில் அடக்கம் செய்ய ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டது. அப்போது, இஸ்ரேலியப் படையினர், பலஸ்தீனர்கள் சிலர் கற்கள் வீசினர். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களும் வீசப்பட்டன. இதனால், இரு தரப்பினருக்கும் இடையே மோதல் வெடித்தது. இந்த மோதலில் 100 பேர் காயமடைந்தனர். இதில் 15இற்கும் மேற்பட்டவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இரு தரப்பினர் மோதலையடுத்து ஜெருசலேமில் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## வட கொரியாவில் 12 இலட்சம் பேர் மர்ம காய்ச்சலால் அவதி

**மருந்து விநியோக பணியில் இராணுவம் தீவிரம்**



வட கொரியாவில் கொரோனா தொற்றிலிருந்து 6 இலட்சம் பேர் குணமடைந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சுமார் 12 இலட்சம் பேர் அடையாளம் காணப்படாத காய்ச்சலால் அவதிப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொற்றுக்கு 50இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், பொது மக்களுக்கு மருந்து, மாத்திரைகளை விநியோகிக்கும் பணியில் இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் கொரோனா பணிகளை பார்வையிடும் புகைப்படத்தை அந்நாட்டு ஊடகம் வெளியிட்டுள்ளது. போதிய மருத்துவ வசதிக் குறைவால் கணக்கில் காட்டப்படும் அளவை விட வடகொரியாவில் நிலைமை மிக மோசமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## தொடரும் உக்ரைன் - ரஷ்யப் போர்: ஏவுகணைத் தாக்குதலில் உருக்குலைந்த ஒடேசா நகர்



உக்ரைனின் ஒடேசா நகரை சுற்றி வளைத்து ரஷ்யப் படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் குடியிருப்புக் கட்டடங்கள் முழுவதும் சேதமடைந்து எலும்புக் கூடுகளாக காட்சியளிக்கின்றன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை இன்று 64ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், ரஷ்யப் படைகளின் மும்முனைத் தாக்குதலில் உக்ரைன் நகரங்கள் சின்னாபின்னமாகி விட்டன.

கிழக்கு உக்ரைனின் Sievierodonetsk நகரில் ரஷ்யப் படைகள் நிகழ்த்திய குண்டுவீச்சு தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதேபோல், ரஷ்யப் படைகளின் தாக்குதலால் உருக்குலைந்த உக்ரைன் Oleksandrivka நகரின் ட்ரோன் காட்சிகளும் வெளியாகியுள்ளன.

**மரியுபோல் உருக்காலையிலிருந்து மனிதாபிமான வழித்தடம்**

இதேவேளை, மரியுபோல் உருக்காலையில் சிக்கியிருந்த உக்ரைன் வீரர்கள் வெளியேற ரஷ்யா அனுமதித்ததைத் தொடர்ந்து அவர்கள் பஸ்மூலம் ரஷ்ய கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக அந்த உருக்காலையைத் தரைமட்டமாக்கும் நோக்கில் ரஷ்யப் படைகள் தாக்குதலைத் தீவிரப்படுத்தின.

அங்கு பதுங்கியிருந்த உக்ரைன் வீரர்களை வெளியேற அனுமதிக்குமாறு உலக நாடுகளின் தலைவர்கள் வைத்த கோரிக்கையை ரஷ்யா ஏற்றுக்கொண்டது.

முதல்கட்டமாக 5 பஸ்கள் மூலம் உக்ரைன் வீரர்கள் ரஷ்ய கட்டுப்பாட்டிலுள்ள நோவோ-அசோவ்ஸ்க் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் காயமடைந்த 53 வீரர்கள் வைத்தியசாலையிலும், 211 பேர் முகாமிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் 600 வீரர்கள் உருக்காலைக்குள் இருப்பதாக தெரிவிக்கபடுகிறது.

**நேட்டோ நாடுகள் வழங்கிய ஆயுதங்களை கைப்பற்றிய ரஷ்யா**

அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நேட்டோ நாடுகளால் உக்ரைனிற்கு வழங்கப்பட்ட ஏராளமான ஆயுதங்களை ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதக் குழுவினர் கைப்பற்றினர்.

Donetsk மாகாணத்திலுள்ள Avdiivka நகரை நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேறி வருவதால் அங்கிருந்து அவசர அவசரமாக புறப்பட்ட உக்ரைன் வீரர்கள் ஏராளமான பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், சிறிய ரக ஹவுட்சர் பீரங்கிகள் மற்றும் grenade launcherகளை விட்டுச் சென்றுள்ளனர்.

## சுவாமி சிலைகளை சுட்ட பின்னர் வந்த கெட்ட கனவு

**திருப்பிக் கொடுத்துவிட்டு தெறித்தோடிய திருடர்கள்**



உத்தரப்பிரதேசத்தில் கோவில் ஒன்றில் பல கோடி மதிப்பிலான சுவாமி சிலைகளை திருடியவர்கள் அடுத்த சில நாட்களில் பயங்கரமான கனவுகள் வருவதாக கடிதம் எழுதிவைத்துவிட்டு, திருடிய சிலைகளை கோவில் அர்ச்சகரின் வீட்டின்முன் வைத்து தப்பியோடியுள்ளனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் சித்ரகூட மாவட்டத்தின் தருஹா என்னும் கிராமத்தில் 300 ஆண்டுகள் பழமையான பாலாஜி கோவில் உள்ளது. இங்கு கடந்த மே 9ஆம் திகதி இரவு, பல கோடி மதிப்பிலான 16 சுவாமி சிலைகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து திருடர்களைத் தேடி வந்தனர்.

இந்நிலையில், திருட்டுபோன ஆறே நாட்களில் 16 சிலைகளில் 14 சிலைகளை அந்தக் கோவில் அர்ச்சகரின் வீட்டுக்கு அருகே இரவு நேரத்தில் திருடர்கள் வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். கூடவே ஒரு கடிதத்தையும் வைத்துவிட்டு சென்றுள்ளனர்.

அதில், ''கோவிலில் சிலைகளைத் திருடியதிலிருந்து தொடர்ச்சியாக பயங்கரமான கனவுகளாக வருகின்றன. இதனால், நிம்மதி இழந்துவிட்டோம். எனவே, திருடிய சிலைகளைத் மீண்டும் கோவிலில் ஒப்படைக்க முடிவு செய்தோம்'' எனத் திருடர்கள் எழுதியிருந்தனர். கோவிலில் காணாமல்போன சிலைகள் தனது வீட்டின் அருகே கிடைத்துள்ளதை பொலிஸாருக்கு அர்ச்சகர் தெரிவித்தார்.

இது குறித்து பொலிஸார் விசாரிக்கின்றனர். மேலும், மீதமுள்ள 2 சிலைகளின் நிலை என்ன என்பது தொடர்பாக தகவல் இல்லை. இதனால் பொலிஸார் தீவிரமாக விசாரிக்கின்றனர். சிலைகளை திருடியவர்களே, திருடியதற்காக தங்களுக்கு பயங்கரமான கனவுகள் வருவதாக பயந்து சிலைகளை வைத்து சென்றுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஸ்பெயினில் ரயில் விபத்து: ஒருவர் பலி; 85 பேர் காயம்

ஸ்பெயினில் சரக்கு ரயிலொன்று தடம் புரண்டு எதிரே வந்த புறநகர் பயணிகள் ரயில் மீது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 85 பேர் காயமடைந்துள்ளதுடன் ரயில் எஞ்ஜின் டிரைவர் உயிரிழந்துள்ளார்.

பார்சிலோனாவிலிருந்து 14 கிலோமீற்றர் தொலைவிலுள்ள Sant Boi de Llobregat நகரிலுள்ள ரயில் நிலையத்தில், நின்று கொண்டிருந்த பயணிகள் ரயில் மீது தண்டவாளத்திலிருந்து விலகிய சரக்கு ரயில் பலமாக மோதியது.

இந்த விபத்தில் சாரதி உயிரிழந்த நிலையில், 85 பயணிகள் காயமடைந்தனர். மீட்கப்பட்ட அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

## 500 ஆண்டுகள் பழமையான பச்சைக்கல் லிங்கம் மீட்பு



சென்னை பூந்தமல்லியில் 500 ஆண்டுகள் பழமையான ரூ.25 கோடி மதிப்புடைய பச்சைக்கல் லிங்கத்தை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதுடன், கடத்தலுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

9 கிலோ எடைகொண்ட பச்சைக்கல் லிங்கத்தின் உயரம் 7 செ.மீ., சுற்றளவு 18 செ.மீற்றராகும்.

## ஈராக்கை 8ஆவது முறையாகவும் தாக்கிய புழுதிப் புயல்; மக்கள் அவதி

ஈராக்கில் கடந்த சில நாட்களில் 8ஆவது முறையாகவும் வீசும் புழுதிப் புயலால் நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு நோய்த் தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

தொடர்ந்து வீசி வரும் புழுதிப் புயலால் பக்தாத் உட்பட பல்வேறு நகரங்கள் செந்நிற போர்வை கொண்டு போர்த்தியதுபோல் காட்சியளிக்கின்றன.

நூற்றுக்கணக்கான மக்கள் சுவாசக் கோளாறு, சருமப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு நோய் பாதிப்புக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுகாதார நலன் கருதி பாடசாலை உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. பக்தாத் விமான நிலையத்தில் விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.



# முதல் வீரராக பரிதாப சாதனை படைத்த மெத்யூஸ்



பங்களாதேஷ் அணியுடன் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியில் ஒரு ஓட்டத்தினால் இரட்டை சதத்தை தவறவிட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர அனுபவ துடுப்பாட்ட வீரர் அஞ்சலோ மெத்யூஸ் டெஸ்ட் அரங்கில் 99 மற்றும் 199 ஓட்டங்களில் ஆட்டமிழந்த முதல் வீரர் என்ற பரிதாபமான சாதனையை படைத்தார்.

இலங்கை கிரிக்கெட் அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரு போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் டெஸ்ட் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டோகிராமில் தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவுசெய்தது.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் அஞ்சலோ மெத்யூஸ் நிதானமாக ஆடி சதமடித்தார். இரட்டை சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 199 ஓட்டங்களில் அவர் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 153 ஓவரில் 397 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

குறித்த போட்டியில் 199 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 99 மற்றும் 199 ஓட்டங்களில் ஆட்டமிழந்த முதல் வீரர் என்ற பரிதாபமான சாதனையை அஞ்சலோ மெத்யூஸ் படைத்துள்ளார். 2009ஆம் ஆண்டு இந்திய அணிக்கு எதிராக மும்பையில் நடந்த டெஸ்ட் போட்டியில் அஞ்சலோ மெத்யூஸ் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# “இலங்கை கிரிக்கெட்டுக்கு உதவ நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம்” – பாக். கிரிக்கெட் சபை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியானது எதிர்வரும் ஜூலையில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், குறித்த சுற்றுப்பயணத்தை திட்டமிட்டபடி நடத்த தயாராக இருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால், இலங்கையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவது நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், பாகிஸ்தான் அணி திட்டமிட்டபடி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடுவது தொடர்பில் அந்நாட்டு கிரிக்கெட் சபையின் ஊடகப் பணிப்பாளர் சமியுல் ஹசன் பர்னி இந்திய ஊடகமொன்றுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

“இலங்கை கிரிக்கெட்டுக்கு உதவ நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம். குறிப்பாக, அவர்களுக்கு கடினமான நேரத்தில் டெஸ்ட் தொடருக்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இலங்கையுடன் நாங்கள் மிகவும் வலுவான உறவைக்கொண்டுள்ளோம். இந்த இரண்டு நாடுகளும் மிகவும் கடினமான காலங்களில் ஒருவருக்கொருவர் உதவியுள்ளன. இலங்கை கிரிக்கெட் எடுக்கும் எந்த முடிவையும் நாங்கள் வரவேற்கிறோம். குறித்த தொடரை இலங்கையிலோ அல்லது வேறு இடத்திலோ நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டாலும் எமக்கு ஆட்சேபனை இல்லை'' - என்று அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், போட்டித் தொடர் குறித்த இறுதித் தீர்மானம் இலங்கை கிரிக்கெட் சபையுடையது எனவும் அவர்கள் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் உடன்படுவதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

முன்னதாக, பாகிஸ்தான் அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தில் ஒருநாள் தொடர் இணைக்கப்பட்டிருந்தபோதிலும் இலங்கை கிரிக்கெட் சபையின் கோரிக்கைக்கமைய ஒருநாள் தொடர் குறித்த சுற்றுப்பயணத்திலிருந்து இரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# இந்திய அணியின் தலைவராகும் தவான்?




தென்னாபிரிக்க அணியுடனான தொடரில் இந்திய அணியின் தலைவராக ஷிகர் தவான் செயற்படுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

2022 ஐ.பி.எல்லை தொடர்ந்து இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்யும் தென்னாபிரிக்க அணி 5 இருபதுக்கு 20 போட்டிகள்கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிகள் டெல்லி, ராஜ்கோட், பெங்களூர் போன்ற நகரங்களில் நடைபெறவுள்ளது. குறித்த தொடரில் பல சீனியர் வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

ரோஹிட் சர்மா, கே.எல்.ராகுல், ரிஷப் பந்த் மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகிய வீரர்களுக்கு இந்தத் தொடரிலிருந்து ஓய்வளிக்க பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளது. இங்கிலாந்தில் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிக்காக வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக இந்திய அணியின் தலைவராக ஷிகர் தவான் அல்லது ஹார்திக் பாண்டியா நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹார்திக் பாண்டியா தற்போது ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணியின் தலைவராக மிகச் சிறப்பாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மறுமுனையில் ஷிகர் தவானும் நீண்ட நாட்களாக இந்திய அணிக்காக விளையாடி வருகிறார். அதிக அனுபவம் வாய்ந்த வீரர் என்பதால் அவரிடம் தலைமையை ஒப்படைக்க பி.சி.சி.ஐ. பரிசீலித்து வருகிறது. ஜூன் 9ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடர் ஜூன் 19 வரை நடைபெறவுள்ளது.

# ப்ளேஓப் வாய்ப்பை இழந்த பஞ்சாப்



டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி தோல்வியை தழுவிய நிலையில், அந்த அணி ப்ளேஓப் சுற்றுக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது. குறித்த போட்டியில் தோற்கும் அணி தொடரிலிருந்து வெளியேறும் என்பதால் இரு அணிகளும் வெற்றிபெறும் முனைப்போடு களமிறங்கின.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி கெப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்தது. 160 ஓட்டங்கள் எடுத்தால் என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி இறுதியில் 142 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதன் மூலம் டெல்லி அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் டெல்லி அணி ப்ளேஓப் சுற்றுக்கான வாய்ப்பை தக்கவைக்க, பஞ்சாப் அணி வெளியேறியது. முன்னதாக மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் ப்ளேஓப் வாய்ப்பை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ராயுடு மன உளைச்சலில் இருந்தாராம்!



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான அம்பத்தி ராயுடு திடீரென கடந்த சனிக்கிழமை ஒரு ட்வீட் செய்தார். அந்த ட்வீட்டில், “இது எனது கடைசி ஐ.பி.எல். என்று அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 13 வருடங்களாக 2 சிறந்த அணிகளில் அங்கம் வகித்து விளையாடியதில் எனக்கு ஓர் அற்புதமான நேரம் கிடைத்தது. அற்புதமான பயணத்திற்காக மும்பை இந்தியன்ஸ் மற்றும் சி.எஸ்.கேவுக்கு மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்'' என குறிப்பிட்டிருந்தார்.

இந்த ட்வீட் சென்னை ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்தது. இதனையடுத்து அவர் அந்த ட்வீட்டையும் அழித்துவிட்டார். இதுகுறித்து தெரிவித்த சென்னை அணியின் தலைமை செயல் அதிகாரி காசி விஸ்வநாதன், “சரியாக செயற்படாததால் சற்று அவர் ஏமாற்றம் அடைந்துள்ளார். அதனால், தவறுதலாக அந்த ட்வீட்டை பதிவிட்டுள்ளார். அவர் ஓய்வு பெறவில்லை. அவர் எங்களுடன் இருப்பார்'' - என்றார்.

இதற்கிடையே குஜராத் டைட்டன்ஸ் அணியுடன் சென்னை மோதிய போட்டியில் ராயுடு அணியில் இடம்பெறவில்லை. இந்நிலையில், அம்பத்தி ராயுடுவின் ட்வீட் குறித்து சென்னை அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்ரீபன் ப்ளெமிங் கூறுகையில், “ராயுடு கடந்த சில நாட்களாக தனிப்பட்ட காரணங்களுக்காக மனஉளைச்சலில் இருந்தார். இப்போது அவர் சரியாகிவிட்டார். அவர் அணியில் தொடர்ந்து இடம்பெறுவார். எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை'' - என்றார்.



# “டோனி சென்னை அணியின் ஆலோசகராக செயல்படுவார் என நம்புகிறேன்” - கவாஸ்கர்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் அசைக்க முடியாத வீரராக எம்.எஸ்.டோனி செயற்பட்டு வருகிறார். இவரது தலைமையில் பங்கேற்ற 13 சீசனில் 4 முறை சென்னை அணி சம்பியன் பட்டம் வென்றது. இம்முறை எதுவும் சரியாக அமையவில்லை. தொடர் தோல்விகளால் சென்னை அணி ப்ளேஓப் வாய்ப்பை இழந்தது. டோனிக்கு பதில் கெப்டனாக நியமிக்கப்பட்ட ரவிந்திர ஜடேஜா உபாதையால் பாதியில் விலகினார்.

இதையடுத்து மீண்டும் கெப்டன் பொறுப்பை ஏற்ற டோனிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இனி அடுத்த சீசனுக்கு அணியை தயார் செய்ய வேண்டிய கட்டாயத்தில் சென்னை நிர்வாகம் உள்ளது. டோனிக்கு வயதாகிவிட்டதால், முன்பு போல் கீப்பிங், பெட்டிங் செய்ய முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் தெரிவித்ததாவது, என்னை மஞ்சள் நிற ஜெர்சியில் பார்ப்பீர்கள் என ஏற்கனவே டோனி கூறியுள்ளார். சென்னை அணியில் தொடர விருப்பம் இல்லையெனில், மீண்டும் கெப்டன் பதவியை ஏற்றிருக்க மாட்டார். அடுத்த சீசனில் சென்னை அணியின் ஆலோசகராக செயல்படுவார் என நம்புகிறேன். தோல்வியில் இருந்துதான் பாடம் படிக்க முடியும். கடைசி கட்ட போட்டிகளில் ஜடேஜா பங்கேற்றிருந்தால், களத்தில் டோனி உடன் சேர்ந்து நிறைய விடயங்களை கற்றிருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக இவருக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. எதிர்வரும் காலத்தில் சென்னை அணிக்காக மஞ்சள் நிற ஜெர்சியில் ஜடேஜா களமிறங்குவார். இதில் சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை - என்றார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# அட்டாளைச்சேனை எவர்டொப் விளையாட்டுக் கழகம் சம்பியன்

(பொத்துவில் நிருபர்)

அக்கரைப்பற்று பவர் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட பவர் சம்பியன் கிண்ணம் 2022 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை எவர்டொப் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.





பவர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு 11 பேர் 8 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் ஆலையடிவேம்பு தர்மசங்கரி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை எவர்டொப் மற்றும் அக்கரைப்பற்று சம்பியன் ஆகிய விளையாட்டுக் கழக அணிகள் மோதிக்கொண்டன. நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய எவர்டொப் கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 71 ஓட்டங்களைப் பெற்றனர். 72 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சம்பியன் கழக அணியினர் 8 ஓவர்கள் முடிவில் 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவிக்கொண்டனர்.

இறுதிப் போட்டியில் தனது திறமைகளை வெளிப்படுத்தி எவர்டொப் கழக வெற்றிக்கு வழிவகுத்த என்.எம். சியாம் இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும், இச்சுற்றுத்தொடரின் சிறந்த வீரராக அக்கழகத்தின் இனாத்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

பவர் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளருமான ரீ. கிறோஜாதரன் தலைமையில் இடம்பெற்ற இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பவர் விளையாட்டுக் கழகத்தின் செயலாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான ரீ. தனராஜன், சமூக செயற்பாட்டாளர் ரீ. பிரதீபன், பவர் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகரும், ஆலையடிவேம்பு ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியுமான ரீ. குவிதாகரன், ஆலோசகர்களான எம்.தயாகரன் மற்றும் ரீ. ரதிகரமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இறுதிப் போட்டியின்போது வெற்றிபெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட எவர்டொப் கழக அணியினருக்கு வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசும் அதிதிகளால் வழங்கப்பட்டதுடன், இரண்டாமிடத்தைப் பெற்ற சம்பியன் விளையாட்டுக் கழக அணியினருக்கும் கிண்ணமும் பணப்பரிசும் வழங்கப்பட்டன. இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 32 முன்னணிக் கழகங்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7